R.R.NO. 92/66 P

மேழிச்செல்வம்

பராபவ ஹூ-வைகாசி மீ- 1966-மே-ஜூன்

பாரதப் பிரதமர்-தம் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த கோதுமை பயிருடன்

சிறந்த பலரக திராட்சை சாகுபடிக்கான பரிசு கல்லூரி பழத் தோட்டத்துக்கு வழங்கப்பட்டது. கோவை விவசாய கல்லூரி ஆய்வுக் கூடத்தின் சார்பில் தலைவர் திரு. B. W. X. பொன்னையா பரிசுக் கோப்பை பெறுதல்.



'நீலம் ரகத்துக்கான முதற் பரிசு பெற்ற சாந்தூர் திரு. ராமச்சந்தர் அவர்கள் பரிசு பெறுதல்.



வீட்டில் தயார் செய்யப்பட்ட பழப்பொருட்களில் சிறந்த 'ஸ்குவாஷுக்கான பரிசு பெறுபவர் குமாரி ஜேன், கோவை.

(பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, எப்ரல் 2, 3 தேதிகளில் நடந்த திராட்சை மற்றும் தோட்டக் கலைக் காட்சியின்போது மத்திய உணவு விவசாயத்துறை காரியதரிசி திரு B. சிவராமன் பரிசு வழங்ினுர்.).

மேழிச்செல்வம்

சந்தாதாரர்களுக்கு

நினைவூட்டுகிறோம்

1966ஆம் ஆண்டு ஜூலை—ஆகஸ்ட் (ஆடி) மாதம் இத முடன் முடிவாகும் 'மேழிச்செல்வம்' சந்தாதாரர்களின் சந்தா எண் மாவட்டவாரியாக கீழே கொடுக்கப்பட் டுள்ளன :—

மாவட்டம்		சந்தா எண்	
		முதல்	வரையுள்ள
செங்கல்பட்டு	..	4141	4201
தென்ஆற்காடு	..	7728	7873
வடஆற்காடு	..	1269	1343
தஞ்சாவூர் ..	..	2614	2666
திருச்சி ..	..	8316	8351
சேலம் ..	..	9723	9875
மதுரை ..	..	4842	4931
கோயம்புத்தூர்	..	7010	7185
இராமநாதபுரம்		4000	4108
திருநெல்வேலி	..	892	1144
கன்னியாகுமரி	..	2104	2186
நீலகிரி ..	..	5228	5231
உள்ளூர் சந்தா	..	2668	2684

"மேழிச்செல்வம்" தொடர்ந்து பெற மேற்படி சந்தா தாரர்கள் வருட சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் தேதிக்குள் கீழ்க் கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி புதுப் பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5

புதுப்பிக்கும்போது தவறாமல் மாவட்டத்தையும் சந்தா எண்ணையும் அதில் குறிப்பிடவும்.

முன்பு தலைமை அலுவலகத்தில் சந்தா செலுத்திய வர்கள் சந்தா எண்ணுடன் உள்ளூர் சந்தா என்று குறிப்பிடவும்.

புதிதாக சந்தா செலுத்த விரும்புவோர் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) அருகில் உள்ள விவசாய அலுவலகத்தில் அல்லது மணியார்டர் மூலம் மேற்குறிப்பிட்ட முகவரியில் செலுத்தி சந்தா தாரராகப் பதிவு செய்துக் கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும்போது தங்கள் முகவரியைத் தெளி வாக எழுதவும்.

ஆறு மாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறு தல் ஏற்பட்டால், மாவட்டம், சந்தா எண் முதலியவற் றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

உள்ளுரை

	பக்கம்
தீவிர விவசாயத்திட்டத்தில் விளைந்த நன்மைகள். ..	5
தீவிர விவசாய திட்டமும் கூட்டுறவும் ..	8
விவசாயச் செய்திக் கதிர் ..	10
மரம் நடுவிழா ..	14
பற்றுடன் பராமரிப்பு பறவைப் பண்ணையில் ..	16
பழத்தோட்டம்	18
கேள்வியும் பதிலும்	20
கருணைக்கிழங்குசாகுபடி	22
சென்னை மாநில விளை-புல ஆய்வு நிறுவனம் ..	24
வறட்சியில் இருந்து கரும்பைக்காக்க எளிய வழிகள் ..	26
வானொலிசெய்திகள்	27
காலநிலை அறிக்கை	29

விளம்பரங்கள் :

டாடா பைஸன்	4
ஐ.சி.ஐ.	13
நீரூற்று கண்டுபிடித்தல்	14
பொட்டாஷ்	15
வால்டாஸ்	17
நீர் ஊற்று நிபுணர்	19
ராஜாபண்ணைத்தோட்டம்	23
சூப்பர்	25

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50


டாடா பைஸன் மற்றும் ராலி
ஒரு பிரச்னையைத் தீர்க்கிருர்கள்!
நீண்ட மௌனத்தை முதலில் கலைத்தார் டாடா.
"நல்ல வளர்ச்சிக்கான அறிகுறிகள் இருக்கின்றன" என்ருர் அவர்.
"சிறந்த வடிவழகு!" என்று எழிலில் சொக்கினுர் பைஸன்.
"கட்டான தேகவாகு" என்ருர் ராலி தம் போக்கில்.
"உண்மை!" என்று அதை ஆமோதித்தார் டாடா.
"இந்த வளர்ச்சியில் நமக்கும் பங்கு உண்டு. ராலீஸ்
'மரம் மார்க்' உரங்கள் மேலும் சிறந்த காப்பிப் பயிர் வளர உதவுகிறது.
டாடா பைஸன் பூச்சி மருந்துகள் அமோகமான
விளைச்சல் தர அதைப் பாதுகாக்கிறது."
காப்பிக்கொட்டை நாணிக்கோணிப் பேசிற்று:
"காப்பி ருசியாயிருப்பதற்கும் அது ஒரு காரணம்."
TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES
டாடா பைஸன் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணி புரிகிறது!
SHBI-RF-87 TAM

மேழிச்செல்வம்

சுழன்று மேர்ப்பின் துலகம் அதனு
லுழந்தும் உழவே தலே.

மலர் 23	பராபவஞூ வைகாசிமீ 1966—மே-ஜூன்	இதழ் 5

தீவிர விவசாயத்திட்டத்தினுல் விளைந்த நன்மைகள்

திரு. M. முகுந்தன், கூட்டு விவசாய நெறியாளர் (தீவிர சாகுபடித் திட்டம்), தஞ்சாவூர்.

தீவிர விவசாயத் திட்டத்தினுல் தஞ்சை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை? இது சாதாரணமாக எல்லோரும் கேட்கவேண்டிய ஒரு கேள்வி. பொதுப் பணம் பெருவாரியாக ஒரு நிறுவனத்திற்காகவோ அல்லது ஒரு திட்டத்திற்காகவோ செலவிடப்படும்பொழுது, இது நியாயமாக கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி தான். தீவிர விவசாயத் திட்டத்தின் உடனடி குறிக்கோள் என்னவெனில் விவசாயிகளுக்கு விவசாயத் தொழில் நுணுக்க உதவிகளேயும் விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருள்களேயும் தக்க தருணத்தில் போதுமான அளவு கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதேயாகும்.

திட்டத்தில் கூறப்படும் தொழில் நுணுக்க உதவிகள் (Technical Guidance) எல்லாம் தீவிர விவசாயத் திட்ட அலுவலர்களால் விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட வழிகளில் அளிக்கப்படுகின்றன :

(1) நிருபணங்கள்.—தீவிர சாகுபடித் திட்டம் 1960-ல் ஆரம்பித்ததிலிருந்து 7877 நிருபணங்கள் போடப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் நிருபணத் திட்ட முறைகளே முந்திய ஆண்டின் அனுபவத்தைக்கொண்டு மாற்றி அமைத்துக் கொண்டே வந்ததில், 1965-ம் ஆண்டு குறுவைப் பருவத்தில் நடத்தப்பட்ட நிருபணங்கள் முன்னெப்பொழுது மில்லாத ஒரு புது வடிவம் பெற்றன. அதிசய ஆடுதுறை 27 நெல் ரகம், சேர்ந்தாற்போல் 25 ஏக்கருக்குக் குறையாத பல பண்ணேகளில் தீவிர சாகுபடித் திட்ட முறைகள் (Package of Practices) அனேத்தையும் கடைப் பிடித்து மொத்தம் சுமார் 5,000 ஏக்கரில் நிருபணத்திற்காக சாகுபடி செய்யப்பட்டது. இந்த 5,000 ஏக்கர் விஸ்தீரணத்தில் ஏக்கருக்குச் சராசரி மகசூல் 3857 ராத்தல் கிடைத்துள்ளது. எனக்குத் தெரிந்த வரையில் நம் நாட்டில் வேறு எந்த நிருபணத்திலும் ஐயாயிரமென்ன, ஒரு ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணத்தில் கூட இவ்வளவிற்கு சராசரி மகசூல் கிடைத்ததாகத் தெரியவில்லே. சுமார் 1 ஏக்கர் வரையுள்ள சிறிய நிலப்பரப்பில் வேண்டுமானுல் ஏக்கருக்கு 8,000 ராத்தல் அல்லது 9,000 ராத்தல் மகசூல் கிடைத்திருக்கக்கூடும். இந்த 5,000 ஏக்கர் நிருபணங்களில் ங்கு கொண்ட 441 விவசாயிகளுக்கும், தஞ்சை ஜில்லா சராசரி குறுவை மகசூலேக் காட்டிலும் 62 சத வீதம் அதிக

(29—4—66 அன்று திருச்சி வானெலி நிலேயத்தில் 'கிராம வானெலி மன்ற "நிகழ்ச்சியின்போது" தீவிர விவசாயத் திட்டத்தினுல் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நன்மைகள்" என்ற தலேப்பில் ஆற்றிய உரை)

விளைச்சல் கிடைத்தது. அதன் மதிப்பு சுமார் ரூ. 10 லட்ச ரூபாயாகும். தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்கள் இந்த வெற்றியுடன் மாத்திரம் நின்று விடவில்லை. 1966 குறுவைப் பருவத்தில் கீழ்க்கண்டவாறு சிறந்த முறையில் பெருமளவில் நிருபணங்கள் செய்து காண்பிக்க திட்டமிட்டுள்ளனர்.

(அ) சென்ற ஆண்டில் நடத்திய 5,000 ஏக்கராவிற்குப் பதிலாக இவ்வாண்டில் 25,000 ஏக்கரில் அதாவது தஞ்சை ஜில்லாவில் மொத்த குறுவை விஸ்திரணத்தில் பத்தில் ஒரு பங்கில் இந்நிருபணம் செய்து காண்பிக்கப்படும். இதில் சுமார் 10,000 விவசாயிகள் பங்கு கொள்வார்கள்.

(ஆ) தீவிர சாகுபடித் திட்ட முறைகள் அனைத்தையும் நிருபணத்தில் செய்து காண்பிப்பதோடல்லாமல் சுலப மாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கடன் வசதி செய்து கொடுக்கும் முறைகளையும் அக்கடன் தொகையை திருப்பி நெல்லாகவே வசூல் செய்யும் வழிகளையும் நடைமுறையில் காண்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே, விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருள்களையும், சாகுபடிச் செலவிற்கான பணத்தையும் கடனுகச் சுலபமாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பெறுவதற்கும், மேற்படி கடன் தொகையை நிலத்திலிருந்து கிடைக்கும் விளைபொருளாகத் திருப்பிக் கொடுத்து சுலபமாகத் தீர்ப்பதற்கும் இந்நிருபணங்கள் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கும்.

வல்லுநர்கள், பேராசிரியர்கள் அல்லது விரிவுரையாளர்கள் அடங்கிய ஒரு குழு பட்டப்படிப்புக்கோ அல்லது தேர்விற்கோ பயிலும் மாணவர்களைப் பயிலுவிக்கலாம். அப்படி கல்வி பயிலும் மாணவர்களில் ஒரு சிலரே முதல் வகுப்பிலோ அல்லது இரண்டாவது வகுப்பிலோ தேர்ச்சி பெறலாம். ஆனுல் பெரும்பான்மையோர் சாதாரண தேர்வுதான் பெறலாம் ; ஒரு சிலர் தேருமலும் இருக்கலாம். இது எந்த கல்வித் திட்டத்திலும் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும். ஆனுல் இந்த 5,000 ஏக்கர் நிருபணத் திட்டத்திலோ ஒரு சிலர் கூட மட்டுமின்றி எல்லா விவசாயிகளும் சிறந்த முன்னேற்றம் காண்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, தீவிர விவசாயத் திட்டம் இப்பணியை திருப்திகரமான முறையில் செயல்படுத்தியிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

(2) பண்ணைத் திட்டங்கள் தயாரித்தல்.—தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு தனி பண்ணைத் திட்டம் தயாரிக்க உதவியளிக்கப்படுகிறது. இதன் மூலம் கிராம சேவக்குகள் ஒவ்வொரு விவசாயி யையும் நேரிடையாகச் சந்தித்து பேசி, திருந்திய சாகுபடி முறைகளைப் போதிப்பதற்குத் தகுந்த வாய்ப்பு கிடைக்கின்றது. அந்த ஆண்டிற்குத் தகுந்த விவசாய திட்டத்தை திட்டவும் உதவுகின்றன. மேலும், இதன் மூலம் அந்த விவசாயி சென்ற ஆண்டில் திருந்திய முறைகளை எவ்வளவு தூரம் பின்பற்றினுர் ? அதனுலடைந்த பலனென்ன ? இவ் வாண்டில் அவருக்கு விதை, உரம், பூச்சி மருந்து போன்ற உற்பத்திக்குத் தேவையான பொருள்களும் கடன் வசதிகளும் எவ்வளவு தேவை ? இவை போன்ற மற்ற விவரங்களையும் நாம் அறிய முடிகின்றது. இதன் மூலம் இவ்வாண்டிற்குத் தேவையான பொருள்களை முன் கூட்டியே தயார் செய்து தகுந்த காலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யும் வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆகவே பண்ணைத் திட்டங்கள் தயாரிப்பதென்பது மற்றொரு சிறந்த விவசாய போதனு முறையேயாகும். சென்ற 6 ஆண்டுகளில்தயாரிக்கப்பட்ட பண்ணைத் திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது.—

1960–61	..	..	..	36,683	பண்ணைத் திட்டங்கள்.
1961–62	..	..	..	53,401	,,
1962–63	..	..	..	68,689	,,
1963–64	..	..	..	1,05,437	,,
1964–65	..	..	..	1,56,556	,,
1965–66	..	..	..	1,72,617	,,

(3) பயிற்சி.—தொழில் நுணுக்க முறைகளை விளம்பரப்படுத்தும் மூன்ரும் முறை, பயிற்சியாகும். நிருபணத் திட்டத்தில் கூறியது போலவே தீவிர விவசாயத் திட்டப் பயிற்சியிலும் அலுவலர்கள் வருடாவருடம் பயிற்சி அளிக்கும் முறைகளில் முன்னேற்றமான மாறுதல்களைச் செய்திருக்கிருர்கள்.

1964–65-ம் ஆண்டில் 18 அரசாங்க பதிவு பெற்ற அலுவலர்களும், 144 விவசாய விஸ்தரிப்பு அலுவலர் களும், 58 கூட்டுறவு விஸ்தரிப்பு அலுவலர்களும், 36 வட்டார வளர்ச்சி அலுவலர்களும், 7560 முற்போக்குள்ள விவசாயிகளும், 51 கிராம சேவிகாக்களும், 28 முக்கிய சேவிகாக்களும் தீவிர விவசாயத் திட்ட சம்மந்தமான பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றனர். இந்த பயிற்சி சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. இப்பயிற் சியில் அதிகமான அளவு முற்போக்கு விவசாயிகளும், அரசாங்க அலுவலரல்லாத கூட்டுறவு நிறுவனத்தார்களும் ஆர்வத்துடன் கலந்துகொள்வதிலிருந்து பயிற்சி சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது என்பது தெளிவா கிறது.

(4) செய்தியும், விளம்பரமும்.—இத் திட்டத்தின் கீழ் நடக்கும் செய்தித் துறையின் பணிகள் விவசாய முன்னேற்றத்திற்கான தொழில் நுணுக்க முறைகளை விளம்பரப்படுத்தும் நான்காம் முறையாகும். 1960-லிருந்து தீவிர விவசாயத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அநேக வெளியீடுகளில் கீழ்க்கண்ட துண்டு பிரசுரங்கள், புத்தகங்கள், குறிப்புத் தாள்கள், சுவரொட்டிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

		வகை.	எண்ணிக்கை.
1. சுவரொட்டிகள் (Wall Posters)	..	59	62,425
2. குறிப்பு மடிப்புத்தாள்கள் (Folders)	..	6	1,41,070
3. துண்டுப் பிரசுரங்கள் (Hand Bills)	..	16	3,39,700
4. செய்தி விளக்க அட்டைகள் (Flash Cards)	..	1	15,000
5. குறிப்பு நோட்டீசுகள் (Leaflets)	..	3	20,000
6. சிறு புத்தகங்கள் (Booklets)	..	11	9,330

எமது அலுவலகத்தில் ஒரு ஆப்செட் அச்சு இயந்திரமும் (Offset Press), டிரெடில் அச்சு இயந்திரமும் (Treadle Machine) அவைகளை இயக்குவதற்கு தேவையான அலுவலர்களுடன் இயங்கி வருகின்றன. செய்திப் பிரிவிலிருந்து வெளி வரும் பிரசுரங்களை எல்லோரும் அதிகமாக விரும்புவதால் அதிகப் பிரதிகள் தேவைப்படு கின்றன. ஆகவே அச்சகத்திற்கு இடைவிடாது வேலையிருந்துகொண்டேயிருக்கின்றது.

விவசாயிகள், அவரவர்களின் பிரதேச விவசாய முன்னேற்றத்தைக் குறித்து ஆலோசனை கேட்டு இவ்வலுவலகத் திற்கு அவ்வப்போது கடிதம் எழுதுகிறார்கள். விவசாய சம்மந்தமாக ஆலோசனை கேட்டு வரும் கடிதங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இது போன்ற கடிதங்கள் தஞ்சை மாவட்டத்திலிருந்தும், சென்னை மாநிலத்தின் இதர மாவட்டங்களிலிருந்தும் மாத்திரம் வருவதோடல்லாமல் வெளி மாநிலங்களிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. தீவிர விவசாயத் திட்டம் வெகுவாக பிரபலமடைந்திருப்பதற்கு இதுவே ஒரு சிறந்த சான்றாகும்.

விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருள்களின் விநியோகமும், உதவிகளும்.

விவசாய இலாகாவும் கூட்டுறவு இலாகாவும் இணைந்து ஏனைய இலாக்காக்களின் முழு ஒத்துழைப்புடன் விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருள்களையும், வழி முறைகளையும் செய்துகொடுப்பதென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. விவசாய இலாகா, பொறுக்கு விதைகள், பூச்சி பூசண மருந்துகள், விவசாயக் கருவிகள் மற்ற உபகரணங்கள் ஆகிய வற்றை விநியோகிக்கிறது. கூட்டுறவு இலாகா இரசாயன உரங்களையும், ஓரளவு விதை, பூச்சி மருந்து, விவசாயக் கருவிகள் முதலியவற்றையும் வழங்குகிறது. தேவைப்படும் கடனுதவியைப் பெறவும், தேவையான விவசாய இயந் திரங்களையும் மற்றும் உபகரணங்களையும் அவற்றை இயக்கக்கூடிய சிப்பந்திகளுடன் அரசாங்கம் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தந்துதவுகிறது. தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பலவகைப்பட்ட உற்பத்திப் பெருக்கப் பொருள்களைப் பற்றி இவ்வாறு விவரித்துக் கொண்டே போனால் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் போதாது. தற்சமயம் இரசாயன உரங்களின் விநியோகம் மாத்திரம் திட்ட ஆரம்பத்திலிருந்த அளவைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகரித்துள்ளது. பருவ நிலை சாதகமில்லாத 1965–66-ம் ஆண்டிலும் கூட இரசாயன உரங்களுக்கு ஏற்பட்ட கிராக்கி குறையாமல் தொடர்ந்து அதிகரித்தே வந்துள்ளது. 1964–65-ம் ஆண்டில் 42,000 டன்களும், 1965 66-ம் ஆண்டில் சுமார் 50,000 டன்களும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

தீவிர விவசாயத் திட்டம் ஆரம்பிக்குமுன்னிருந்த மகசூலை விட 1964–65-ம் ஆண்டில் ஏக்கருக்கு 377 ராத்தல் அதிக மகசூல் கிடைத்துள்ளது. இந்த அதிக மகசூலினால் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள 14 லட்சம் ஏக்கராவைச் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் 10 கோடி ரூபாய் நிகர வருவாய் அடைந்துள்ளார்கள் என்று நான் குறிப்பிட்டால் அது மிகையாகாது. ஆனால் தீவிர விவசாயத் திட்டம் திருந்திய சாகுபடி முறைகளைப் போதிக்கும் திட்டமாகவிருப்பதால் அதன் மூலமாகப் பெறும் நன்மைகளை பணத்தின் அளவில் நிர்ணயிப்பது உகந்ததன்று. இத்திட்டத்தின் மூலம் விவசாயம் மக்களிடையே பரவியிருக்கும் ஒரு விழிப்புணர்ச்சியே, இத்திட்டத்தின் ஒரு பெரிய சாதனையாகும்.

ஜெய் ஜவான்! ஜெய கிசான்!!

தீவிர விவசாய திட்டமும் கூட்டுறவும்

திரு. D. A. சுயம்பிரகாசம், கூட்டு ரிஜிஸ்திரார் (தீவிர விவசாயப் பகுதித் திட்டம்).

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் வாழ்க்கைத்தர உயர்வாலும் உணவு தானியத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போவதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். தேவைப்படும் அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க நல்ல பல திட்டங்கள் அநேக ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்கள் பெரும்பாலும் பொறுக்கு விதை உபயோகித்தல், குறைந்த அளவு விதைகளைக் கொண்டு தரமான நாற்று தயாரித்தல், தக்க உரமிடுதல், பூச்சி மருந்து அடித்தல், மண் வளப் பாதுகாப்பு, தகுந்த அளவு நீர்ப்பாசனம் ஆகிய திருந்திய முறைகளைப் பரப்பும் திட்டங்களாகும்.

இந்தத் திருந்திய முறைகள் பரவலாக மாநிலம் முழுதும் பிரச்சாரம் மூலமும், நிருபணங்களின் மூலமும் பரப்பப்பட்டு வந்தன, வருகின்றன. இவற்றில் ஒரு முறையையோ அல்லது சில முறைகளை மட்டுமோ பின்பற்றி விவசாயிகள் ஒரு அளவிற்கு உற்பத்தியை அதிகரித்துள்ளனர். இந்த முறைகள் அனைத்தையும் ஒருங்கே கட்டுக்கோப்பான முறையில் கடைப்பிடித்தால்தான் விளைச்சலை கணிசமான அளவுக்குப் பெருக்க முடியும். இதை சில குறிப்பிட்ட பகுதிகளில் எல்லா சாதனங்களையும் பயன்படுத்தி அங்குள்ள விவசாயிகள் மூலம் நிருபிக்க வேண்டும், அப்படிச் செய்தால் அங்கே உற்பத்தி பெருகுவதுடன் மற்ற பகுதிகளில் உள்ளவர்களுக்கும் நம்பிக்கையுடன் பின்பற்றக்கூடிய முன் மாதிரியாக அமையும் என்ற நோக்கத்தோடு 'Package Programme, என்று சொல்லப்படும் 'தீவிர விவசாயத் திட்டம்' முதன் முதலில் 1960-ம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் துவக்கப்பட்டு நடந்து வருகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஒவ்வொரு விவசாயியினுடைய பண்ணைக்கும் அந்த விவசாயியைக் கொண்டே திருந்திய முறையில் பயிரிட ஒரு திட்டம் தயாரித்தலும், அதை நிறைவேற்ற தேவையான விதை, ரசாயன உரம் முதலிய உற்பத்திப் பொருள்களையும், கடன் தேவைப்பட்டால் கடனையும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிடைக்க வகை செய்தலும், அந்த விவசாயிக்கு எல்லா திருந்திய முறைகளையும் பின்பற்றுவதற்கு அவ்வப்போது அறிவுரையும் உதவியும் செய்தலும் ஆகும். பண்ணைத் திட்டம் விவசாயி புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிதாக இருக்கும். அதில் உற்பத்தி செய்யப்போகும் பயிருக்கு ஏற்ற விதை, ரசாயன உரம், பசுந்தாள் உரம், பூச்சி மருந்து முதலியவை எந்தெந்த அளவில் தேவை என்பதும், இவற்றிற்காக எவ்வளவு கடன் தேவை என்பதும் குறிக்கப்படும். இந்தப் பண்ணைத் திட்டத்தின்படி கிராமத்தில் உள்ள கூட்டுறவு சங்கம் உற்பத்திப் பொருள்களையும் கடனையும் வழங்கும். தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதியில் இந்த தீவிர சாகுபடித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு 911 கிலோவாக இருந்த நெல் விளைச்சல் இந்தத் திட்டம் வந்த பிறகு 1092 கிலோவாக அதாவது 20 சத விகிதம் கூடுதலாக உயர்ந்துள்ளது.

தஞ்சை மாவட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நிலக்கடலை, பருத்தி, தென்னை, வாழை, புகையிலை கரும்பு ஆகிய பயிர்களுக்காக தீவிர உற்பத்தித் திட்டங்கள் மாநிலத்தில் சுமார் 50 பஞ்சாயத்து யூனியன்களில் சென்ற மூன்று நான்கு ஆண்டுகளில் துவங்கி நடந்து வருகின்றன. சென்ற ஆண்டிலிருந்து இதே அடிப்படையில் செங்கற்பட்டு, கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் பாசன வசதி உள்ள பகுதிகளில் நெல் சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, பருத்தி ஆகிய பாசனப் பயிர்களுக்காக தீவிர உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு

---

* 31—3—66 அன்று ஒலிபரப்பான வானொலி உரை.

வருகிறது. தஞ்சை திட்டத்தைப் போலவே, இந்தத் திட்டத்திலும் ஒவ்வொரு பயிருக்கும் மாவட்டத்திற்கு ஏற்ப தீவிர சாகுபடி முறைகள் நிர்ணயிக்கப்பட்டு விவசாயிகளுக்குத் தனி பண்ணை திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, கடனும் உற்பத்திப் பொருள்களும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தீவிர விவசாயத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கூட்டுறவு சங்கங்களுக்கு பெரும் பங்கும் பொறுப்பும் உண்டு. பண்ணைத் திட்டங்கள் தயார் செய்யப்படும் விவசாயிகளில் ஒரு பகுதியினர் கடன் தேவையில்லாமல் இருந்தாலும், அவர்களுக்கு உற்பத்திப் பொருள்களைக் கூட்டுறவு சங்கங்கள் வாங்கி விநியோகிக்கின்றன. கடன் தேவைப்படும் பெரும் பகுதியினருக்கு உற்பத்திப் பொருள்களையும் சாகுபடி செலவிற்காக ரொக்கமும் கடனாக வழங்குகின்றன. பண்ணைத் திட்டம் தயாரிக்கப்பட்டவர்களில் ஏற்கெனவே கூட்டுறவு சங்க அங்கத்தினர்களாக இல்லாதவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்து கடன் வழங்குகின்றன.

தீவிர விவசாயத் திட்டங்கள் தங்கு தடையின்றி நல்ல முறையில் நிறைவேறுவதற்காக கூட்டுறவு சங்கங்கள் தங்கள் விதிமுறைகள் சிலவற்றை மாற்றிக்கொண்டுள்ளன. முக்கியமாக, ஒரு விவசாயி தான் கோரும் கடன் தொகையில் பத்தில் ஒரு பாகம் பங்குத் தொகையாக சங்கத்தில் முன்னதாகவே அதாவது கடன் விண்ணப்பம் செய்யும்பொழுதே கட்ட வேண்டும் என்ற முறையை மாற்றி, கடன் பட்டுவாடா செய்யப்படும் நேரத்தில் பங்குத் தொகையை வசூலித்து வருகின்றன. ஒரு அங்கத்தினர் வாங்கக்கூடிய கடன் உச்ச அளவு 3,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது. இதில் நபர் ஜாமீன் மீது வாங்கக்கூடிய கடன் அளவு 1,000 ரூபாயி லிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளுக்காக கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயி களுக்கு இந்த அளவு 5,000 ரூபாயாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே வாங்கியுள்ள கடனைத் தவணைப்படி திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் அங்கத்தினர்களுக்கும் புதிய கடன் அனுமதி அளிக்கப்படுகிறது. தவணை கடந்த கடனைக் கட்டிய பிறகு, அனுமதிக்கப்பட்டு தயாராக இருக்கும் புதிய கடனை அவர்களுக்குப் பட்டுவாடா செய்யப்படுகிறது.

கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை என்று சில சமயங்களில் சிலரால் சொல்லப் படுகிறது. கடன் வாங்கிய அங்கத்தினர்கள் அந்தக் கடன் திருப்பிச் செலுத்த வேண்டிய கெடு கடந்துங்கூட, கட்டவில்லையென்றால் மேற்கொண்டும் அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று யாரும் சொல்லவோ எதிர்பார்க்கவோ மாட்டார்கள் என்பது திண்ணம். கடனைத் திருப்பிச் செலுத்திவிட்ட அங்கத்தினர்களுக்கு மறுபடியும் கடன் கொடுப்பதில் எந்தவிதத் தடங்கலும் இல்லை. கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அங்கத்தினர்கள் காலதாமதம் செய்வது சமீபகாலத்தில் அதிகரித்துள்ளது. மழையின்மை, புயல், வெள்ளம் முதலிய காரணங் களால் விளைச்சல் பாதிக்கப்பட்டால் கடனைத் திருப்பிச் செலுத்தும் கெடுவை ஒத்திப் போடவும், விளைச்சல் பாதிக்கு மேல் பாதிக்கப்பட்டால் கடனை இரண்டு அல்லது மூன்று ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கவும் வழிவகைகள் உள்ளன. ஆனால் விளைச்சல் பாதிக்கப்படவில்லை என்றால் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். இதில் அசட்டையாக இருந்தால் விவசாயிகள் மறுபடியும் அடுத்த சாகுபடிக்கும் கடன்பெற முடியாமல் போய்விடுகிறது. அதனால் தீவிர விவசாய திட்டத்தின்படி திருந்திய முறைகளைப் பின்பற்றி சாகுபடி செய்வது கடினமாகும். எனவே கடனைத் திருப்பிச் செலுத்துவதில் கருத்தாக இருக்க வேண்டும்.

கடனும் உற்பத்திப் பொருள்களும் ஒவ்வொரு விவசாயிக்கும் தேவைப்படும் அளவுக்குக் கொடுப்பதைவிட தேவைப்படும் நேரத்தில் கொடுப்பது மிகவும் முக்கியம். ஒவ்வொரு பயிருக்கும் அவ்வப்போது கடன் விண்ணப்பம் செய்து அந்தக் கடன் சங்கத்தினாலும் மத்திய கூட்டுறவு பாங்கியினாலும் அனுமதிக்கப்பட்டு பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்ற முறையில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகையினால் இதை மாற்றி ஆண்டுக்கடன் அளவு திட்டம் என்ற திட்டத்தை தீவிர விவசாயப் பகுதித் திட்டம் அமுலில் உள்ள மாவட்டங்களில் கூட்டுறவு சங்கங்கள் மேற் கொண்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு பயிருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு உற்பத்திப் பொருள்களும் சாகுபடி செலவும் எவ்வளவு என்பதை விவசாய இலாகாவால் சிபாரிசு செய்யப்படும் திருந்திய முறைகள்படி நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தான் வருகிற ஆண்டில் உற்பத்தி செய்யப்போகும் எல்லாப் பயிர்களுக்கும் தேவைப் படும் மொத்தக் கடன் அளவு அனுமதிக்கப்படுகிறது. பிறகு ஒவ்வொரு பயிரும் உற்பத்தி செய்யப்போகும் காலத்தில் அதற்கு வேண்டிய கடனை ரொக்கமாகவும் உற்பத்திப் பொருள்களாகவும் மறு அனுமதியின்றி அங்கத்தினர் பெற்றுக்கொள்ள முடிகிறது. பண்ணைத்திட்டம் தயாரிக்கப்படும் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் ஒரே அடிப்படையில் கடன்கள்—அதாவது உற்பத்திப் பொருள்களும் ரொக்கமும் கொடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டுக் கடன் அளவு திட்டத் தில் அங்கத்தினர் எந்தெந்தகாலத்தில் கடன் பெற்றுக் கொள்ள வேண்டும், எந்தக் காலத்தில் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதும் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு அங்கத்தினர் மூன்று நான்கு பயிர்கள் ஒரு ஆண்டில்

[12-ம் பக்கம் பார்க்கவும்

விவசாய செய்திக் கதிர்

(கே. எம். சுந்தரம், R.S. எர்னஸ்ட், விரிவினைப் பிரிவு, விவசாயக் கல்லூரி, கோவை.)

டி.என்.ஆர். 2. தற்போது வெளியிடப்பட்டுள்ள ஒரு புது ரக நெல்

கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தி லுள்ள நெல் அபிவிருத்தி பகுதியிலிருந்து ஒரு புது ரக நெல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு டி.என்.ஆர். 2 என பெயரிடப்பட்டிருக்கிறது. (காட்டு வானம் என சாதாரணமாக அழைக்கப்படும்) நீரில் மூழ்கியுள்ள பகுதிகளில் சாகுபடி செய்ய இது மிகவும் ஏற்றது. இது ஒரு நீண்டகால நெல் வகையாகும். தண்ணீர் மட்டம் 6 முதல் 7 அடி வரை உயரக்கூடிய, நீரில் மூழ்கும் தஞ்சை மாவட்டம் பகுதிகளில் சம்பா பருவத்தில் சாகுபடி செய்ய இது மிகவும் ஏற்றது. காட்டுவானம் நெல் தற்பொழுது எங்கு சாகுபடி செய்யப்படுகிறதோ அங்கு அதற்கு பதிலாக உப யோகிக்கவே டி.என்.ஆர். 2 ரகம் வெளியிடப்பட்டிருக் கிறது. சாதாரண காட்டுவானம் ரகத்தைவிட இது 12 சதம் அதிகமாக அதாவது ஏக்கருக்கு சராசரி 1,200 கிலோ மகசூல் கொடுக்கிறது.

நிலக்கடலைக் கேற்ற இடைவெளியும், நீர் பாய்ச்சுதலும்

கொடி நிலக் கடலைக்கு இறைவைச் சாகுபடிக்குத் தேவையான இடைவெளிப் பரிசோதனைகள் நடத்தப் பட்டதில் 12"×6", 15" × 4" போன்ற அதிகமான இடைவெளி விடப்பட்ட செடிகள் ஈர எடையில் முறையே 8·8 சதமும், 17·4 சதமும் 9"×9" இடைவெளி விடப்பட்டதைவிட அதிகமாக விளைந்துள்ளது. பத்து நாட்களுக்குப் ஒருமுறை நீர்ப்பாய்ச்சியதில் தோல்-காய் விகிதம் 74·2 சதவிகிதமாகவும், ஏக்கருக்கு அதிக நிகரலாபமாக ரூபாய் 344·17 காசும் கிடைத்தது.

நிலக்கடலைக்கு யூரியாவை இலைமேல் தெளிக்கும் முறை நன்மையளிக்கிறது.

கோடை காலத்தில் சாகுபடி செய்யப்படும் நிலக்கடலைக்கு இலைமீது யூரியா தெளிப்பதன் நன்மையை சோதித்துப் பார்க்க யூரியாவை இரண்டு முறை தெளித்து தழைச்சத்து கொடுக்கப்பட்டதில் யூரியா தெளிக்கப்பட்ட பயிர், யூரியா தெளிக்கப் படாத பயிரைக் காட்டிலும் 2 மடங்கு தோல்–காய், விகிதம் கொடுக்கிறது எனத் தெரியவருகிறது. ஒரு பாதியளவு யூரியாவை அடியுரமாகவும் மற்றொரு பாதி யூரியாவை இலைகளின்மீது இரண்டு மூன்று முறை தெளிக்கும்முறை மிகவும் சிறந்ததாக இருக்கிறது. யூரியா முழுவதையும் இலையின்மீது தெளிப்பதில், பாதியளவு யூரியாவை அடியுர மாகவும் மற்றொரு பாதியை இலையின்மீது தெளித்த பரிசோதனை பாத்திகளிலும் யூரியா முழு வதையும் அடியுரமாக உபயோகித்த பாத்திகளை விட எண்ணெய் சத்து 1·74 முதல் 3·48 சதம் அதிக மாக இருந்தது.

சி.ஏ.என்.; அம்மோனியம் சல்பேட், யூரியா முதலிய இரசாயன உரங்களில் நெற்பயிருக்குச் சிறந்த உரம் எது?

நெற் பயிருக்கு மேற்கண்ட இரசாயன உரங் களை உபயோகிப்பதனால் எந்தவிதமான வேறுபாடும் தெரியவில்லை. 30 பவுண்டு நைட்ரஜன் கொடுக்கும் வகையில் வேறுபட்ட இரசாயன உரங்களாகிய கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், அம்மோனியம் சல்பேட், யூரியா முதலிய உரங்களை நெற்பயிருக்கு உபயோகித்த சோதனைகளில் மகசூலில் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வேறுபாடு இல்லை எனத் தெரிகிறது.

கரும்பு வயல்களில் காய்ந்த இலையைப் போட்டு மூடுவது அதன் மகசூலை அதிகரிக்கிறது

காய்ந்த இலைகளைப் போட்டு கரும்பு வயல்களில் மண்ணை மூடுவதால் கரும்பு விளைச்சல் அதிகமாகிறது. சருகு முதலியவற்றை நிலத்தில் பரப்பி 8 நாட் களுக்கு ஒருமுறை நீர்ப்பாய்ச்சுவதால் 3·8 டன் அதிக மகசூல் கிடைத்திருக்கிறது.

கரும்பு வயல்களில் சருகுகளைப் பரப்புவதால், களைகளின் வளர்ச்சி பெரும் அளவு குறைந்துவிடுகிறது. மேலும் களைகளின் வளர்ச்சியும் தடைப்படுத்தப் படுகிறது. கரும்பு வயல்களில் சருகுகளைக் கொண்டு மண்ணை மூடிவிடுவதால் களைகளின் வளர்ச்சி சருகு களால் மூடப்படாத நிலங்களைவிட 75 சதவிகிதம் குறைவாக இருக்கிறது. சருகுகளால் மூடப்பட்ட நிலத்தில் ஈரம் 0·9 சதவிகிதம் பாதுகாக்கப்படுகிறது. சருகுகளை பரப்பிவிடுவதால் இளங்குருத்துப் பூச்சியும் அதிகமாகத் தாக்குவதில்லை.

சருகுகளை நிலத்தில் போட்டு பரப்புவது எவ்வாறு?

கரும்பு நட்ட 25—30 நாட்களுக்குப் பிறகு ஒரு களை எடுக்கவேண்டும். இதற்குள் பயிர் 1—1½ அடி உயரம் வளர்ந்திருக்கும். பிறகு கரும்பு தோகைகளை 6 முதல் 8 அங்குல உயரத்திற்கு, வளரும் கரும்புப் பயிருக்கு சேதம் விளைவிக்காதவாறு பார்களில் போட்டு பரப்பிவிட வேண்டும். பார் களின் மேல்புறமுள்ள தோகைகளை மண்ணால் மூடிவிடவேண்டும். இதனால் பார்களின் மேலே பரப்பப்பட்ட தோகை, சருகுகள் கீழே விழுவதில்லை. மேலும் நீர்ப்பாய்ச்சவும் வசதியாக இருக்கிறது.

திராட்சையின் காய்ப்புத் திறனை முன்னறிவித்தல்

தமிழ் நாட்டிலுள்ள திராட்சைத் தோட்டங்களிலும் ஏனைய தென் மாநிலங்களில் பெரும்பான்மையான இடங்களிலும் திராட்சை இரண்டு முறை அறுவடை செய்யப்படுகிறது. நம் மாநிலத்தில் பொதுவாக முதல் பயிருக்கு நவம்பர்–டிசம்பர் மாதங்களிலும், இரண்டாம் பயிருக்கு மே–ஜூன் மாதங்களிலும் கவாத்து செய்யப்படுகிறது. கவாத்து செய்த நான்கு மாதங்களில் பலனுக்கு வரக்கூடியதாதலால் அந்தத் திராட்சைக் கொடிகள் முறையே மார்ச்சு, எப்ரல், ஆகஸ்டு–செப்டம்பர் மாதங்களில் பலனுக்கு வருகின்றன.

திராட்சை பழங்கள் ஒருமுறை அறுவடை செய்யப்பட்ட பிறகு திராட்சைக் கொடிகளுக்கு இரண்டு மாதகாலம் ஓய்வளிக்கப்படுகிறது.

திராட்சைக் கொடிகளின் சென்ற பருவத்திய கிளைகளை அல்லது கொம்புகளை திராட்சை வகைக்குத் தகுந்தவாறு 3 முதல் 7 கணுக்களை விட்டு வெட்டி விடுதலே கவாத்து செய்தல் எனப்படும். இவ்வளவு காலமாக கவாத்து செய்தல் என்பது திராட்சை சாகுபடியாளர்களின் அனுபவத்தைக் கொண்டும் ஆராய்ச்சி நிலையங்களில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டும் ஏற்பட்ட ஒரு அனுபவமுறையாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த அனுபவ முறை பல ஆண்டுகாலமாக தனி கவனிப்பினால் ஏற்பட்டதேயன்றி கொடிகளில் உண்டாகக் கூடிய திராட்சைக் கொடிகளின் எந்த விதமான காய்ப்புத் திறன் தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டதில்லை.

கோவை விவசாயக் கல்லூரி தோட்டக் கலைப் பிரிவினால் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலம் கவாத்து செய்வதற்கு முன்னரே மொட்டுகளை நுண் நோக்கிக் கருவியால் **(Microscope)** பரிசோதிப்பதின் மூலம் திராட்சைக் கிளைகளின் காய்ப்புத் திறனைத் தெரிவிக்க இயலும் என கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அனுப்-இ-ஷாகி கொடிகள் கல்லூரி பழத் தோட்டத்தில் இரண்டு வெவ்வேறு பாத்திகளில் **(Plots)** தேர்ந்தெடுக்கப்பட்டு கவாத்து செய்யப்பட்ட கிளைகளிலிருந்து உண்டாகும் தண்டுகள் கவாத்து செய்யப்பட்ட 120 நாட்களுக்குப் பிறகு அதாவது மறு கவாத்து செய்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் சோதித்துப் பார்க்கப்பட்டன. நுண் நோக்கிக் கருவியில் இந்தக் கணுக்களை சோதித்துப் பார்ப்பதன் மூலம் பூபாகங்கள், மொட்டுகளில் இருப்பதையும் இல்லாமலிருப்பதையும் கொண்டு மொட்டுகளை இலை மொட்டுகள் என்றும், பூ மொட்டுகள் என்றும் வகைப்படுத்த முடிந்திருக்கிறது. இதற்காக மொத்தத்தில் 10 கிளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு கிளையிலும் முதல் கணுவிலிருந்து 10-வது கணுவரையுள்ள மொட்டுகள் சேகரிக்கப்பட்டு சோதித்துப் பார்க்கப்பட்டன.

ஒன்று முதல் பத்தாவது கணுவரை ஒவ்வொரு கணுவிற்கும் காய்ப்புத் திறன் சதவிகிதம் கணக்கிடப்பட்டு பூ மொட்டுகள் அதிகமாக உள்ள கணுக்களில் கவாத்து செய்ய வசதியாக கவாத்து அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. கல்லூரிப் பழத்தோட்டத்தில் முதலில் நடத்தப்பட்ட சோதனையில் 90 முதல் 100 சதவிகிதம் முன்னறிவிப்பு முறை சரியாகவே இருந்தது. தற்பொழுது திராட்சை காய்ப்புத் திறன் முன்னறிக்கை கோவையிலும், கோவையைச் சுற்றி உள்ள இடங்களிலும் உள்ள தனியார் திராட்சை தோட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. விளைவுகளும் முன்னறிக்கை 90 முதல் 100 சதவிகிதம் சரியானதெனத் தெளிவுபடுத்துகின்றன.

சிபாரிசு செய்யப்படும் கவாத்து அட்டவணையைக் கடைப்பிடிப்பதனால் விளைச்சலைக் கிட்டத்தட்ட 62 சதவிகிதம் அதிகப்படுத்தமுடியும் என்பதைத் தவிர, காய்ப்புத் திறன் முன்னறிக்கையின் உபயோகம் விஞ்ஞான முறையில் மிகவும் சரியான கவாத்து அட்டவணையை காணக்கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

பூச்சிமருந்து விஷத்திற்குத் தடுப்பு மருந்துகள்

விற்பனையிலிருக்கும் அநேக பூச்சி, பூசண மருந்துகள் மிக விஷத்தன்மை வாய்ந்தனவாகும். அவற்றை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டியிருக்கிறது. மிகவும் கவனத்துடன் கையாளப்பட்டபோதிலும் எதிர்ப்பாராதவிதமாக ஏதாவது விபத்து ஏற்பட்டால் விபத்துக்குள்ளானவரை உடனடியாக வைத்திய நிலையத்திற்கு கொண்டுபோவதுதான் மிகவும் சிறந்ததாகும். எனினும் அதற்கு முன் கீழ்க்காணும் தடுப்பு முறைகளைக் கையாளலாம்:—

விஷம் சுவாச உறுப்புகள் வழியாகச் சென்றிருந்தால், உதாரணமாக விஷம் வாய்ந்த புகை போடும் வஸ்துக்களைப் போல உள்ள மருந்துகளுக்கு திறந்த வெளியிடத்திற்கு நோயாளியை எடுத்துச் சென்று, தேவைப்பட்டால் செயற்கை முறையில் சுவாசிக்கச் செய்யலாம். நன்றாக சுவாசிப்பதற்காக பெருங்குடலின் அடிப்பாகத்தை நன்றாகக் கையால் விரிவுபடுத்தலாம்.

உடலின்மேல் மருந்து பட்டிருந்தால் உடனடியாக வெதுவெப்பான சோப்புத் தண்ணீரில் அந்த பாகத்தை தோல் தேய்ந்து விடாமல் நன்றாகக் கழுவி விட வேண்டும். மருந்துத் துளிகள் கண்ணில் பட்டிருந்தால் சுத்தமான தண்ணீர் விட்டு நன்றாகக் கழுவ வேண்டும். மருந்து வயிற்றுக்குள் சென்றிருந்தால் உடனடியாக வயிற்றைக் காலி செய்ய வேண்டும். (1) ஒரு கண்ணாடி டம்ளர் தண்ணீரில் 15 கிராம் சாதாரண உப்பை (சோடியம் குளோரைடு) கரைத்து அந்த உப்பு நீரைக் குடிக்கச் செய்து வாந்தியெடுக்கச் செய்ய வேண்டும். வாந்தியெடுக்கப்பட்ட திரவம் சுத்தமாக இருக்கும் வரை பலதடவை வாந்தியெடுக்கச் செய்ய வேண்டும்.

(2) ஒரு கண்ணுடி டம்ளர் தண்ணீரில் இரண்டு முதல் மூன்று கரண்டி பொடி செய்த கடுகைப் போட்டு அதைக் குடிக்கச் செய்தும் வாந்தியெடுக்கச் செய்யலாம். வாந்தியெடுக்கச் செய்து முடிந்தவரை வயிற்றைச் சுத்தம் செய்த பின்னர் எரிச்சலைத் தணிக்கக்கூடிய அல்லது மிருதுவாக்கக்கூடிய பொருள்களைக் கொடுக்கலாம். அதாவது முட்டையின் வெண்கரு கலந்த தண்ணீர், மிருதுவான பால் பவுடர் மாவு, மக்காச்சோள மாவு, அல்லது பிசைந்த உருளைக்கிழங்கு முதலியவற்றைக் கொடுக்கலாம்.

எல்லாவித விஷ மருந்து விபத்துக்களுக்கும் உபயோகிக்கக்கூடிய பொதுவான மருந்து

ஊக்குவித்த கரி (Activated Charcoal)—2 பாகம்.

மகனீசியம் ஆக்ஸைடு (Magnesium)—1 பாகம்.

மரப்பட்டை அமிலம் (Tannic acid)—1 பாகம்.

முதலியவற்றை 15 கிராம் (½ அவுன்ஸ்) கலவை யாக்கி ½ டம்ளர் வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்கச் செய்தால் அது விஷத்தைக் கிரகிக்கச் செய்கிறது அல்லது விஷத்தை முறித்து விடுகிறது. மேற்கண்ட கலவை அமிலங்கள், தாவர நஞ்சுப் பொருள்கள் (alkaloids), குளுக்கோஸைடுகள், கடிய உலோகங்கள் முதலியவற்ருல் ஏற்பட்ட விஷத்தை மாற்ற உபயோகப்படுகின்றது. மேற்கண்ட கலவையை குடிக்கச் செய்த பின்னர் குடலை அரிக்கக் கூடிய தன்மையுடைய விஷப்பொருள்களைத் தவிர மற்ற விஷப்பொருள்களுக்கு, இரைப்பையை சுத்தம் செய்யக்கூடிய பொருள் அல்லது வாந்தியெடுக்கச் செய்யும் பொருள் முதலியவற்றைக் கொடுக்கலாம். அல்லது வயிற்றின் சுவர்களை வயிற்றுக் குழாயால் கழுவிவிடலாம். தண்ணீரில் கரையக் கூடிய தாமிரக்கூட்டுப் பொருள்களினுல் ஏற்பட்ட விஷ மருந்து விபத்துக்களைத் தடுக்க (அதாவது மயில் துத்தம், காப்பர் அசிடேட், **நீலக்கல், கந்தக உப்புக்கள் முதலியவைகளுக்கு**) அதிக அளவு தண்ணீரினுல் அல்லது 30 க. செ. (ஒரு அவுன்சு) மக்னீசியப் பாலினுல் (Milk of magnesia) நன்ருகக் கழுவவேண்டும். மருத்துவர்கள் 0·5 கிராம் (7½ கிரெயின்) பொட்டாசியம் பெரோசயனேட்டை தண்ணீரில் கலந்து கொடுப்பார்கள்.

பாதரசப் பொருள்களுக்கு (Mercury compounds) பால், பச்சை முட்டை இரண்டையும் சேர்த்துக் கொடுத்த பின்னர் வாந்தி யெடுக்கச் செய்யக்கூடிய பொருள்களைக் கொடுக்க வேண்டும்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி செய்வதற்காகக் கடன்கள் வாங்கினுலும் எல்லாக் கடன்களையும் எந்த விளைச்சலிலிருந்து உபரிகண்டு கடனைத் திருப்பிச் செலுத்த முடியுமோ அந்த விளைச்சலுக்குப் பிறகு கடன்களைத் திருப்பிச் செலுத்த ஏதுவாகும்படி கெடுதேதி நிர்ணயிக்கப்படுகிறது.

கிராமக் கூட்டுறவு சங்கங்களில் பெரும்பான்மையானவை சிறு சங்கங்களாக இருக்கின்றன. இதனுல் அவை லேவாதேவியைப் பெருக்கி, போதிய வருமானம் பெற்று, சிப்பந்திகள் வைத்து இன்னும் சிறந்த முறையில் பணியாற்றும் வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றன. குறைந்த பட்சம் இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்கு லேவாதேவி செய்ய வாய்ப்பில்லாத சிறு சங்கங்கள் இரண்டு அல்லது மூன்றை இணைத்து ஒரு பெரிய சங்கமாக ஆக்கினுல் அந்த பெரிய சங்கம் இன்னும் திறமையாகச் செயல்படமுடியும். சங்கத்திற்கென ஒரு தனி அலுவலகம், கிடங்கு, சம்பளக் காரியதரிசி, ஒன்றிரண்டு சிப்பந்திகள் என்ற வகையில் வசதிகள் செய்து கொள்ள முடியும். அங்கத்தினர்கள் நேரடியாகக் காரியதரிசியை அணுகி தங்கள் தேவைகளைச் சுலபமாகப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அதாவது விவசாயக் கூட்டுறவு பாங்குகள் செயல்படுகின்ற அளவுக்கு கிராமக் கூட்டுறவு சங்கங்களும் பலப்படுத்தப்படும். இம்மாதிரி சிறு சங்கங்களை இணைப்பதன்மூலம் பலமான சங்கங்களை உருவாக்கும் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தயாரிக்கப்பட்டு அதை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிராமக் கூட்டுறவு சங்கங்கள் விவசாயத்திற்கென விவசாயிகளால் நடத்தப்படுகின்றன. விவசாய முன்னேற்றத்துக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இந்த சங்கங்களின்மூலம் அவர்கள் செய்து கொள்ளமுடியும்.

சங்கங்களைத் திறம்பட நடத்துவதில் எல்லா அங்கத்தினர்களும் அக்கரை செலுத்த வேண்டும். தடங்கலோ தவறுகளோ சங்க நிர்வாகிகளாலும் சில அங்கத்தினர்களாலும் ஏற்பட்டால், கண்காணிப்புடன் இருந்து அவற்றைச் சிர்செய்து மேலும் அவை ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் கூட்டுறவு சங்கத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால்தான் விவசாய முன்னேற்றம் காண முடியும்.

கரும்பு விளைச்சல் போட்டி

கரும்பு விளைச்சல் போட்டிகளில் வெற்றி பெற்றவர் பெயர்களும் பிற விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதி

பரிசு விபரம்.	பரிசு பெற்றவர் பெயர் மற்றும் முகவரி.	நடவு கிராமம்.	ஏக்கருக்கு விளைச்சல். (டன்னில்.)
1965 தனிப் பட்டம்—			
ஆலைப் பகுதி பரிசு	திரு. பழனிவேல் கவுண்டர்	பட்டலூர்	74·500
திருச்செங்கோடு வட்டப் பரிசு	திரு. கே. டீ. ராமச்சந்திர ஐயர்	இராயமங்களம்	73·750
நாமக்கல் வட்டப் பரிசு	திரு. வி. கே. கைலாச கவுண்டர்	கோபம்பாளையம்	74·250

இலைகளின் அடிபாகததிலிருநது சததை உறுஞ்சி பூசசிகள பிழைக்கின்றன 8 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை 'காமெக்ஸேன்' டி.025 ஐத் தூவியாகிலும் அல்லது 'காமெக்ஸேன்' டபிள்யு. டி. பி. யை தெளித்தாகிலும் மிள காய்ச் செடிகள் நல்ல முறையிலும் ஆரோக்கியத்துடனும் வளர வழி செய்யவும்.

மேற்கொண்டு விவரங்களை உங்களுக்கு அருகாமையில் உள்ள ஐ. ஸி. ஐ. காரியாலயத்தில் விசாரித்துப் பெற்றுக் கொள்ளவும்.

ICI

I. C. I. (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா, பம்பாய், சென்னை, புது டில்லி.

"மரம் நடுவிழா"

ப. சிவநேசம் பிள்ளை

"மரம் நடுவிழா" என்பது மரத்தைமட்டும் நடுவது என்பதன்று. காய்கறிப் பயிராக இருந்தாலும் சரி பூண்டு, செடி, கொடி எதுவாயிருந்தாலும் சரி இந்த விழாவாகக் கொண்டாடலாம். பொதுவாக மழைக்கால மாகிய ஜூன், ஜூலை மாதமாகவோ! அக்டோபர், நவம்பர் மாதங்களோ ! இதற்குச் சிறப்பாக அமைகின்றன.

வனங்கள் விவசாயத்திற்கு அரும்பெரும் உதவிகளைச் செய்கின்றன. குறிப்பாக விவசாயத்திற்கு இன்றி யமையாது தேவைப்படும் நீர், வனங்களினால் அதிக மழை பொழியச் செய்வதுடன் வறட்சி நிலையை நீக்கிக் குளிர்ச்சி நிலையையும், சூறாவளிக்காற்றினால் ஏற்படும் சேதத்தையும் தடுப்பதோடு மழை நீரின் வேகத்தை மரங்கள் தடுத்து நிறுத்துவதால் வளமான மண் இம்மிகள் நீர் அரிப்பினால் சேதமுறாமல் பாதுகாத்து (Soil Erosion) நீரைத்தேக்கி வைப்பதால் கீழே உதிர்ந் துள்ள இலைதழைகளை மக்கச் செய்து விவசாயத்திற்குச் சிறந்த எருவாகத் (Organic Matter) தருகிறது. உறிஞ் சப்பட்ட நீரைக் கோடைக்காலங்களில் சிறிது சிறிதாக வெளிப்படுத்தி நதிகளிலும், சிற்றாறுகளிலும், கால்வாய் களிலும், நீரோடைகளிலும் அந்நீரை ஓடச்செய்வதால் அவைகளுக்கு வற்றாத ஜீவநதி என்ற பெயரையும் வாங்கித் தருவது மரங்கள் அடர்ந்த வனங்களே. ஆகை யால்தான் வனங்களை விவசாயத்தின் வளர்ப்புத்தாய் (Forestry is the Foster Mother of Agriculture) என்று சொல்வதுமுண்டு.

மரங்களை முப்பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். முத லில் பழம் தரும் மரங்கள் ; மானிடர்களுக்கு வலிவை யும் வனப்பையும் தரவல்ல ஊட்டப்பொருள்களும் வைட் டமின்களும் நிறைந்த பழமரங்கள் உண்டு. மருந்துப் பொருள்களாகவும் பயன்படும் பலவகைக் கனிகளும் உண்டு.

பழ மரங்களுக்கு உதாரணங்களாக ஆப்பிள், ஆப்பிரிக்கக் காட்டு ஆரஞ்சு, அத்தி, பேரிச்சை, செரி, கிரேப், பிளம், கொய்யா, பலா, மா, மாதுளை, மங்குஸ்தான், முந்திரி, சப்போட்டா, எலுமிச்சை, நாவல், விளாம்பழம் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

யூகாலிபிட்டஸ் (Eucalyptus), ஒதியன், நெல்லி, நொச்சி, முருங்கை, இலுப்பை, இலவங்கம், பப்பாளி, கடுக்காய், வேம்பு, கிராம்பு, குங்குமப்பூ, எட்டிக் காய், ஜாதிக்காய் மரம், மர ஆமணக்கு, வில்வ மரம் போன்றவைகள் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த தாகும்.

உலகின் உயிர்நாடியாகக் கருதப்படும் விவசாயத்திற்கு தேவையான பொருளாகவும் விவசாயக் கருவிகளாகவும் மரம் பயன்படுகிறது. அஃதன்றிக் கால்நடைகட்குத் தீவனப் பொருளாகவும் விவசாயத்திற்குப் பசுந்தழை உரமாகவும் சில விலையுயர்ந்த ஏற்றுமதிப் பொருளாக வும் சிறிய பெரிய தொழிற்சாலைகட்குத் தேவையான மரங்களும் வீடுகட்டத் தேவையான உத்தரம், கதவு, ஜன்னல் இவைகட்குத் தேவையான மரங்களும் முக்கிய மாகச் சமைப்பதற்குத் தேவையான எரி பொருளாகப் பயன்படும் சில மரங்களும் கீழே தரப்படுகின்றன. சந் தனம், தேக்கு, மருது, வெண்தேக்கு, வாகை, வன்னி, வேங்கை, வேலான், ஈட்டி, மஞ்சக்கடம்பை, ஊஞ்சல், இருள், இலவம், இலுப்பை, பிலா (தோணிசெய்ய), ஆச்சா, அயிலான், காட்டிலவன், பீமரம் (தீப்பெட்டி செய்ய), சொரை (சீப்பு செய்ய), புரசு, புன்கு, புளி, பனை, பாலை, தென்னை, கருங்காலி, கமுகு, கருமருது, கரு வேலான் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

மரங்களை உங்கள் வீட்டின் முன்புறமோ, பின்புறமோ, கிணற்றோரமோ, குளம் குட்டை ஓரங்களிலோ, கிராமத்தின் தரிசு நிலங்கள், வயல் வரப்போரங்கள், ஓடைகள், கால்வாய்களின் ஓரங்கள், அல்லது மழை பெய்யும் காலங் களில் விதைகளின் மூலமாகவோ, கன்று, போத்து நடுவது மூலமாகவோ "மரம் நடுவிழா" செய்வது மட்டுமல்லாது, அதனைக் "காப்பாற்றியே தீருவது" என்ற உறுதியும் செய்து கொள்ள வேண்டும்.

நீரூற்று கண்டுபிடித்தல்

எல்லாம் வல்ல இறைவனருளால் 33 ஆண்டு அனுபவமுள்ளவர். சர்க்காராலும் விவசாயிகளா லும் சர்டிபிகேட் பெற்றவர். புதிய கிணறு வெட்டு கிறவர்கள், போரிங் போடுகிறவர்களுக்கு பூமியி லுள்ள மண் பஞ்ச பூத விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்து உப்புநீர், சுண்ணாம்பு நீர், சவுடு நீர் நீங்கலாகவும், மலைபிரதேசங்களில் பாறையற்ற இடமாகவும் நீரூற்று கண்டுபிடிப்பவர்.

கிணறு, போரிங் பரிசோதனைக் கட்டணம்

கிணறு ஒன்றுக்கு ரூ. 30·00
கிணறு இரண்டுக்கு ரூ. 55·00
கிணறு மூன்றுக்கு ரூ. 75·00
கிணறு நான்குக்கு ரூ. 100·00

பழைய கிணறு பரிசோதனைக் கட்டணம்

நீரூற்றிருந்தால் ரூ. 15·00
இல்லாவிடில் ரூ. 10·00

ரயில் சார்ஜ் தனி.
பதிலுக்கு ரிப்ளை கார்டுடன் எழுதவும்.

முகவரி : –

இ. கி. முருகேச பிள்ளை,
வாட்டர் டிவைனர்,
ஒரையூர் (அஞ்சல்),
பண்ருட்டி (வழி),
கடலூர் தாலூகா,
தென்ஆற்காடு ஜில்லா.

I.R.G.22T.

"விவசாய உற்பத்தியை
அதிகரிப்பதற்கான திறவுகோல்
நைட்ரோஜன், பாஸ்பாரிக் அமிலத்துடன்
பொட்டாஷ்"
சேர்ந்த கலப்பு உரங்களே!
என்று தேர்ச்சிபெற்ற விவசாயி கூறுகிறார்.

எனவே உங்கள் உரத்திட்டத்தில்
பொட்டாஷ்
சேர்க்கத் தவருதீர்கள்

இதனுல்
விளைச்சல் பெருகி
அதிகரித்த லாபமும்
கிடைக்கிறது.

பயிர்களுக்கு உரமிடுவது குறித்து இலவச ஆலோசனையும்,
குறிப்புகளும் விவரங்களும் கிடைக்கும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜன்ஸி லிமிடெட்
8/9, தம்புச்செட்டி தெரு, சென்னை-1.

பற்றுடன் பராமரிப்பு பறவை பண்ணையில் வெற்றி தரும்

எம்.ஜி. காமத்

"லாபம் பெறுவதில் யாருக்குத்தான் சுவையிருக்காது. ஆனால் கோழி வளர்ப்பில் லாபம் பெற வேண்டுமானால் பறவைகள் மேல் பற்று இருந்தால்தான் ஆகும்" என்கிறார் பூனாவின் "மை-பௌல்ட்ரி பாரம்" என்ற கோழிப் பண்ணையை நடத்தும் ஸ்ரீமதி கலபா ஆப்தே. பறவைகள் வளர்ப்பில் இருந்த பற்றுக் காரணமாக அவர் சில ஆண்டுகளுக்கு முன்னால் கோழிப் பண்ணையைத் தொடங்கினார். "பல்லாண்டுகளுக்கு முன் பெண்கள் வீட்டிலேயே பொழுதுபோக்காகச் செய்யக்கூடிய ஒரு தொழிலை செய்து சிறு செலவுகளுக்கு சம்பாதிக்க யோசனை செய்தேன்—கோழிப்பண்ணை வைப்பது நல்லது என்று தோன்றியது", என்றார் ஆப்தே அம்மையார்.

ஸ்ரீமதி கலபா ஆப்தே

எட்டுப்படிப்பாக கோழியைப்பற்றி அவர் வெளிநாட்டுப் பிரசுரங்களின் மூலம் கற்றறிந்தார். பத்து ரூபாய் முதலீடு செய்து இரண்டு நாட்டுப் பெட்டைகளை வாங்கினார். மேலும் பறவைகளைப் பற்றி அவர் அறிந்து கொண்ட பிறகு மெல்ல பண்ணை பலத்தை இருநூறு பறவைகளாகப் பெருக்கினார். பிறகு இரண்டாயிரம் ஆக்கினார். வீட்டு வராந்தாவில் தொடங்கிய பண்ணை பெருகி கொல்லைப்புறம் பாய்ந்து இன்று வீட்டைச் சுற்றி மூன்று ஏக்கர் பெருகிவிட்டது.

"கோழிப்பண்ணை வெகு சுலபமான தொழில் அல்ல" என்கிறார் கலாபா அம்மை. "சிமண்டு கிடைப்பதில்லை! இரும்பு குதிரைக் கொம்பு. வேலையாட்கள் பஞ்சம். நோய்களுக்கு பஞ்சமில்லை இதோட 1956-ல் வெள்ளம் வந்து 2,000 பறவைகள் போய்விட்டன."

அப்படியிருந்தும் கலபா அம்மை பொருட்படுத்தவில்லை. வேறு ஒருவர் ஆனால் பண்ணை வைப்பிற்கு அந்த வெள்ள நீரிலேயே ஒரு முழுக்குப் போட்டிருப்பார்கள். கலபா அம்மை அப்படியில்லை. மறுபடி பண்ணை தொடங்கி விட்டார். "கோழிப் பண்ணையில் நீங்கள் எது முக்கியம் என்று கருதுகிறீர்கள்?" கண்ணில் எண்ணை வார்த்த கவனமும் பண்ணையில் லாபம் பெற முக்கியம். கூலியாளை நம்புகிறவர்கள் கூசாமல் பண்ணையை மூடிவிடலாம். எதையும் முதலாளிதான் முன்னின்று செய்ய வேண்டும்.

அவர் லெக்ஹாரன், ரோட் ஐலந்து பறவைகளை வைத்துள்ளார். அதையே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்கிறார். இப்போது ஆயிரம் பறவைகள் இருக்கின்றன. பறவைகளுக்கு ராணிகெட் நோய் எதிர்ப்பு இன்ஜக்ஷன் செய்யாமலிருப்பதில்லை அவர்.

ஆழ்ந்த கூளமுறை (Deep Litter System) கோழி வளர்ப்புக்கு எடுத்தது என்று அவர் பாராட்டுகிறார். இதனால் செலவு குறைவு. மேலும் தீனிக் கும்பங்கள் தீனி வைப்பதை எளிதாக்கி விட்டிருக்கிறது அவருடைய பண்ணையில்.

"ஒரு-நாள் வயது வந்த குஞ்சுகளை விற்பதிலும் லாபம் உண்டு" என்கிறார் அவர். நான்கு இன்கு பெட்டிகள் அவரிடம் உண்டு. ஒவ்வொன்றிலும் 1,000 குஞ்சுகள் பொரிக்கலாம். மாதம் ஒன்றுக்கு 1,500 முதல் 2,000 வரை குஞ்சுகள் விற்கிறார் அவர்.

அவர் குஞ்சுகளை "பாக்" செய்து அனுப்புவது குறைவு. "தேவைப்பட்டவர்கள் என் பண்ணைக்கு வந்து வாங்கிக் கொள்வதையே நான் விரும்புகிறேன். ஏனெனில் அவர்கள் தாங்களே பார்த்து பொறுக்கி எடுக்கலாம். மேலும் வளர்ப்பு வழிகளை நான் அவர்களுக்கு நேரில் சொல்ல முடியும்" என்கிறார் ஸ்ரீமதி ஆப்தே.

தாமே பொரித்துக் கொள்ள ஆசைப்படுகிறவர்களுக்கு முட்டைகளை அவர் விற்கிறார். உள்ளூர் சந்தைக்கு சிறு பறவைகளையும், தின்னப் பறவைகளையும் விற்கிறார்.

(23-ம் பக்கம்பார்க்கவும்)

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும், அதிகமான விளைச்சல்களுக்கும்



டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்தவெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிரமாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங்க் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.



டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் லிப்டு), முப்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடெட்

எர்த் மூவிங், மைனிங் அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்

பம்பாய் • கல்கத்தா • மதருஸ் • புது டில்லி • பெங்களூர்
லக்னோ • கொச்சின் • அஹமதாபாத் • ஸெகந்திராபாத்
பாட்னா • நாக்பூர் • போபால் • சண்டிகர் • ஜெய்பூர்

everest/618Ar/VOL ta.



பழத்தோட்டம் அமைக்கும்போது

(கோ. லட்சுமி நரசிம்மன், தோட்டக்கலை உதவியாளர், மாதிரி பழத்தோட்டம், ஆத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்.)

பழத்தோட்டமானது நகரங்களின் அருகாமையிலோ, முக்கிய வியாபாரஸ்தலங்களின் அருகாமையிலோ, அல்லது கிராமங்களாக இருப்பின் மேற்கண்ட வியாபார ஸ்தலங்களையும், நகரங்களையும் அடைய நெடுஞ்சாலைகள், புகை வண்டித் தொடர் நிலையங்கள் உள்ள இடங்களில் அமைத்தல் நல்லது. கனி வகைகள் நீண்ட நாட்கள் வைத்திருக்கக்கூடியவை அல்ல. அவைகள் சீக்கிரமாக வினியோகப்படுத்தாவிட்டால், கெட்டு அழுகி விடும் பண்டங்கள். ஆகையால் அவைகளை உடனுக்குடன் வியாபாரஸ்தலங்களுக்கு அனுப்பி விற்று பணம் அடையும் வண்ணம் வசதியான இடத்தில் அமைக்க வேண்டும்.

பழச்சாகுபடிக்கு ஏற்ற மண்ணைத் தேர்ந்தெடுத்தல்.—

வடிகால் வசதியற்ற களிவாய் மண்ணும், தண்ணீரை அதிக நாள் தாங்கி மண்ணின் ஈரத்தைக் காக்காமலும், உரச்சத்து அற்ற பெரு மணற்பாங்கான பூமியும், பூமிக்கு அடியில் 10 அடி ஆழம் வரையில் பாறைகள் உள்ள பூமியும், பழச்சாகுபடிக்கு ஏ ற் ற வை அல்ல. மண்ணின் தன்மைகளைக் கொண்டு இலாபகரமாக பழச்சாகுபடி செய்ய முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக எலுமிச்சை, சாத்துக்குடி, கொடி எலுமிச்சை பயிர் செய்வதற்கு நல்ல காற்று வசதியுள்ள ஆழமான மண் அனுகூலமாக இருக்கும். அடிமண் சிறிது கடினமாக இருக்கும் நிலத்தில் இவைகள் நன்ருக வளர்கின்றன. எனினும் மணற்பாங்கான இருமண் பாட்டு நிலத்தில் நல்ல பாசன வசதி இருந்தால் நன்ருக வளர்ந்து இலாபகரமான பலன் கொ்டுக்கும். வாழைக்கு வண்டல் மண் வேண்டும். சப்போட்டா பயிர் செய்வதற்கு நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண்ணிலும், இரு மண் பாட்டு நிலத்திலும், சுமாரான களிமண் நிலமும் எற்றவைகளாக கருதப்படுகின்றன. இம் மரங்களின் வேர்கள் அதிக ஆழமாக செல்லாததாலும் மூன்று அடிக்கு உட்பட்டு நன்ருக உரமிடப்பட்ட இரு மண்பாடு நிலங்களே சாலச் சிறந்தவை. அதிக சுண்ணும்பு சத்துள்ள பூமியில் இவைகள் வளருவதில்லை. திராட்சை நல்ல வடிகால் வசதியுள்ள எந்த மண்ணிலும், ஆறடி ஆழமுள்ளதும், ஈரப்பசையுள்ள மண்ணிலும் நன்ருக வளரும்.

கனி வகைகளின் தேர்வு .—ஓரிடத்தின் சீதோஷ்ண நிலை அவ்விடத்தில் நிலவும் தனித் தன்மைகள் வானிலை, பெய்யும் மழையளவு இவைகளை ஆதாரமாகக் கொண்டு பழத்தோட்டத்தில் பயிரிடப்போகும் பழ வகைகளைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பழச் சாகுபடியில் உஷ்ண பிரதேசம், சீதோஷ்ணப் பிரதேசம், மித சீதோஷ்ண பிரதேசம் என மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளனர். பழச்சாகுபடி செய்யும் போது அந்தப் பகுதி எந்த சீதோஷ்ண நிலையில் உள்ளது என்றும், அப்பிரிவில் வளரக்கூடியதுமான கனி வகையே தேர்ந்தெடுத்தல் வேண்டும். அந்த பிராந்தியத்திலுள்ள வியாபார ஸ்தலங்களில் எந்தெந்த கனி வகைகள் அதிகமாக விற்பனை ஆகிறதோ எந்த கனி வகைகளுக்கு அதிகமாக கிராக்கி இருக்கிறதோ அவைகளை அதிக அளவில் பயிரிடுதல் வேண்டும்.

நீர்ப்பாசன வசதி அமைத்தல்.—பழச் சாகுபடிக்கு நீர்ப் பாசன வசதி இன்றியமையாதது. தேர்ந்தெடுக்கும் நிலத்தில் கிணறு கால்வாய்ப் பாசனம் போன்றவை இருந்தால் பழச்செடிகளை எந்தெந்த இடத்தில் நடுவது என்பதைப் பற்றி முன் கூட்டியே திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும். எலுமிச்சை, சாத்துக்குடி, கொடி எலுமிச்சை, திராட்சை போன்ற பயிர்களுக்கு வருடம் பூராவும் தண்ணீர் தேவை. ஆகையால் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நடுதல் வேண்டும். மா, சப்போட்டா, பலா, போன்றவைகளைச் சற்று தூரத்திலும், மேட்டுப் பாங்கான இடங்களிலும் நடலாம். இவைகளுக்கு முதலிரண்டு ஆண்டுகளுக்கு தண்ணீர் அதிகப் படியாக தேவை. பழச்செடிகளை வயல்களில் தனித் தனி வகையாக பிரித்து நடுதல் வேண்டும். பழச் செடிகளுக்கு உழவியல் சம்மந்தமான பண்பாடுகளை செய்வதற்கும் பழங்களை ஏக காலத்தில் அதிக அளவில் அறுவடை செய்வதற்கும் , பயிர் பாதுகாப்பு செய்

வதற்கும் இதனுல் சுலபமாக இருக்கும். உயரமாக வளரக்கூடிய மாஞ்செடிகளுடன் குள்ளமாக வளரக் கூடிய அத்தி, மாதுளே, சீதா போன்றவைகளே நடுதல் கூடாது. அப்படிச் செய்தால் தோட்டத்தின் அழகும் கெட்டு விடும், உழவியல் சம்மந்தமான வேலேகளே செய்வதற்கும் இடையூருக இருக்கும்.

தோட்டம் அமைக்கும் நிலத்தில் கிணறு, கால்வாய் போன்றவை இல்லாமலிருந்தால் செடிகள் நடுவதற்கு முன்பு மேட்டுப்பாங்கான இடத்தில் கிணறு வெட்டுதல் வேண்டும். அப்போதுதான் தோட்டம் முழுவதும் தண்ணீரைச் செடிகளுக்கு சுலபமாக பாய்ச்ச முடியும். நிலம் மேடு பள்ளமாக இருந்தால் சரிவுக்கு தக்கபடி காண்டூர் வரப்புகள் போட்டு மண் சரிவைத் தடுக்கலாம். இப்படிச் செய்வதால் மேல் மண்ணில் உள்ள சத்துக்கள் பள்ளத்தில் போய்த் தங்கி விடாதபடி தடுக்கலாம். இப்படிச்செய்யா விட்டால், மேட்டுப்பாங்கான இடத்தில் உள்ள மரங்கள் வளராமலே இருக்கும். இந்த மரங்களுக்கு அதிக உரமிட நேரிடும்.

வேலி அமைத்தல்.—நடவிருக்கும் பழச் செடிகளேக் கால் நடைகளாகிய ஆடு, மாடு, மான் போன்றவைகள் மேயாதிருக்கவும், மகசூல் காலங்களில் பழங்களேத் திருடர்களினுலும், வன விலங்குகளாகிய காட்டுப்பன்றி, குள்ள நரி, போன்றவைகளினுல் சேதம் அடையாமல் இருக்கவும் தோட்டத்தைச் சுற்றி “ பிரசாபிஸ் ஜூலிபிளோரா ” செடிகளே உயிர் வேலியாக அமைக்கலாம். இது அதிகமாக பூமியின் சத்தைக் கிரகிக்காது. இந்தச் செடிகளே வளரும் போதே மூன்று அடி உயரத்திலிருந்து வெட்டி வந்தால், பக்க துளிர்கள் அடர்த்தியாக வளர்ந்து படரும். காற்று தடுப்புகளாகவும் (Wind breakes) உதவும்.

காற்றுத் தடுப்புகள் அமைத்தல்.—சூருவளி காற்றுகள், சீதோஷ்ண நிலேயை மிகைப்படுத்தியும், பழச் செடிகளின் கிளேகள், மகசூல் காலங்களில் பூ, பிஞ்சு, காய், பழம் இவைகள் வரும் தருணங்களில் சேதம் உண்டாகுகின்றன. காற்றுகளேத் தடுக்கக்கூடிய சக்தி வாய்ந்ததும், அதே நேரத்தில் அந்த செடிகளினுல் நமக்கு பலன் கொடுக்கக்கூடியதுமான மா, பலா, முந்திரி போன்ற கனி வர்க்கங்களே காற்றுத்தடுப்புகளாக அமைக்கலாம். இவைகளே வேலியிலிருந்து 15 அடி முதல் 20 அடி இடைவெளியில் செடிக்குச் செடி 25 அடியிலிருந்து 30 அடி இடைவெளியில் நடலாம். பிறகு உயிர்வேலியிலிருந்து ஐந்து அடி தள்ளி செடிக்கு செடி 25 அடி வீதம் சிங்கப்பூர் இலவம் செடிகளே நடலாம். சிங்கப்பூர் இலவ மரம் நல்ல வறட்சியுள்ள மண்ணிலும், மூன்று அல்லது நான்கு வருடத்தில் மரம் ஒன்றுக்கு 300-லிருந்து 350 காய்கள் தரும். சிங்கப்பூர் பஞ்சு மரத்தில் அதிக சிம்புகள் தோன்றுவதால் மரம் படர்ந்து வளர்ந்து காற்றுத் தடுப்புகளாக உதவுகின்றன. மரம் ஒன்றுக்கு மூன்று கிலோ கிராம் சுத்தமான பஞ்சு கிடைப்பதால் தக்க வருவாயும் கிடைக்கின்றது.

நடைபாதைகள், சாலேகள் அமைத்தல்.—பழச்செடிகளுக்கும், ஊடு பயிர்களுக்கும் உரம், வண்டல் மண், கவாத்து செய்த கிளேகளே அப்புறப்படுத்துதல், மகசூல் அறுவடை காலங்களில் அறுவடை செய்த பழங்களே சேகரம் செய்து, வியாபார ஸ்தலங்களுக்கு அனுப்பவும், பார்வையாளர்கள், தோட்டத்தைச் சுற்றி பார்க்கவும், நடைபாதைகளும், சாலேகளும் பழத் தோட்டத்திற்கு இன்றியமையாதவை. சாலேகளின் இரண்டு பக்கங்களிலும் நான்கு முதல் ஐந்து அடி இடைவெளியில் கிளிரிஸீடியா தழை உரச் செடிகளே வைத்தால் தோட்டத்திற்கு வேண்டிய பசுந்தாளுரமும் கிடைக்கும். வேலிக்கும், பாதைக்கும் மத்தியில் ஒரு ஓரமாக 25 அடி இடைவெளியில் தென்னங் கன்றுகளே நட்டால் அது தோட்டத்தின் அழகை மிகைப் படுத்துவதோடு அல்லாமல் வருவாயும் கிடைக்கும்.

கட்டிடங்கள் அமைத்தல்.—தோட்டத்தில் கேந்திர இடமாக ஓரிடம் தேர்ந்தெடுத்து கட்டிடங்களே செடிகளே நடுவதற்கு முன்னதாகவே அமைக்கவேண்டும்.

பழச்சாகுபடி, நெல், கம்பு, சோளம், போன்ற பயிர்களேப்போல போகத்திற்கு போகம் சாகுபடி செய்வதல்ல. இவை பல வருடப் பயிர். ஆகையால் தோட்டம் அமைக்கும் முன் மேற்கண்டவைகளே நினைவில் கொண்டு தோட்டம் அமைக்க வேண்டும்.

நீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்

(1) குழாய் கிணறு இறக்குதல் (Bore Well) புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) இவைகளுக்கு அவரவர்களுடைய பூமியில் உள்ள எல்லா நீர் ஊற்றுகளேயும் கண்டு பிடித்து, அவைகளில் உள்ள தண்ணீரின் அளவை விஞ்ஞான முறையில் கணக்கிட்டு அவைகளில் மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுகள் (cross) சந்திக்கும் சரியான (spot) இடம் கண்டு பிடித்துக் கொடுக்கப்படும்.

(2) என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் காண்பிக்கும் இடத்தில் (Bore Well) குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளே தொடந்து கிடைக்கா விட்டால் ரூ. 2,000 வரை நஷ்டஈடு கொடுக்க நான் உத்திரவாதம் தருகிறேன்.

(3) கணபதி கிராமத்தில், சென்னே மாகாணத்திலுள்ள அநேக வாட்டர் டிவைனர்கள் கண்டு பிடித்துக் கொடுத்த இடங்களில் (Bore Well) குழாய் கிணறு 260 அடி வரை இறக்கியும் தண்ணீர் கிடைக்காத சில தோட்டங்களில் நான் குறித்த இடத்தில் குழாய் கிணறு இறக்கியதில் 10 எச்.பி. மோட்டாருக்கு போதுமான தண்ணீர் சப்ளே தொடர்ந்து இரவு பகலாக கிடைத்திருக்கிறது.

விபரங்களுக்கு (15 ஙபசா ஸ்டாம்புடன்) அணுகுக :—

கே. கந்தசாமி,
நீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்,
s/o கிருஷ்ண கவுண்டர்,
கணபதி (அஞ்சல்), கோயமுத்தூர்-6.

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் ''மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்'' விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.)

எஸ். மதுரைமுத்து, சார்ந்திநகர், அரக்கோணம், வட ஆர்காடு மாவட்டம்,

கே.—என்னுடைய நிலத்தில் நெல் சாகுபடி செய்கிறேன் ஆனால் நிலத்திற்கு கம்போஸ்ட் உரமோ, தொழு உரமோ, தழை உரமோ போடுவது கிடையாது. இதற்கு சக்தியும் கிடையாது. ஆனால் இரசாயன உரத்தை உபயோகப்படுத்துகிறேன். அப்படி நான் இரசாயன உரங்கள் உபயோகப்படுத்தினால் ஒரு ஏக்கருககு எவ்வளவு சூப்பர் பாஸ்பேட், எவ்வளவு யூரியா உபயோகப்படுத்தவேண்டும்? அல்லது கலப்பு உரம் எந்த நம்பர் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு உபயோகப்படுத்தவேண்டும் என்பதைத் தெரியப் படுத்தவும்.

ப.—நிலத்தில் உயிர்வாழும் ஒரு வகை நுண்ணுயிர்கள் (பாக்டீரியாக்கள்) ஆகாயத்திலுள்ள தழைச் சத்தை (Nitrogen) மண்ணில் சேர்த்து பயிர்களுக்கு உப யோகமாகச் செய்கிறது. இப் பாக்டீரியாக்களுக்கு உணவாக நிலத்திற்கு இடும் தொழு உரமும், தழை உரமும் கம்போஸ்ட் உரமும் உபயோக மாகின்றன. மேலும் இந்நுண்ணியிர்கள் மேற் சொன்ன உரங்களை உணவாகக் கொள்வதன்மூலம் அவ்வுரங்களில் உள்ள பயிர்கள் நேரிடையாக எடுத்துக் கொள்ளமுடியாத நிலையிலுள்ள உணவுச் சத்துக்களை பயிர்களுக்கு கிடைக்கச் செய்வதுடன் மண்துகளிலுள்ள பயிர்களுக்கு வேண்டிய சத்துக் களும் பிரிந்து பயிர்களுக்கு உணவாக ஏதுவாகிறது.

மண்ணின் வளம் அம்மண்ணிலுள்ள உபயோக மான நுண்ணியிர்கள் நல்ல நிலையில் அதிகமாக உயிர் வாழ்வதையும் பொருத்தது. எனவே நிலத் திற்கு தொழு உரமோ, கம்போஸ்ட் உரமோ அல்லது தழை உரமோ இடுவது மிகவும் முக்கியம். மேற் சொன்ன உரங்களை போதிய அளவு இட்ட பிறகே மேலுரமாக இரசாயன உரங்களையிடவேண்டும். இல்லையேல் காலப்போக்கில் மண்ணின் வளம் குறைந்து விடும்.

நெற்பயிருக்கு ஏக்கருக்கு 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும், 65 ராத்தல் யூரியாவும் இடலாம். நெற் பயிருக்கு கலப்பு உரம் எண் 1 சிபாரிசு செய்யப் படுகிறது. இக்கலப்பு உரத்தை ஏக்கருக்கு 120 கிலோ வீதம் கடைசி உழவில் இடவேண்டும்.

கே. ஆர். பழனிசாமி, கம்பளியம்பட்டி, வெள்ளக் கோயில்.

கே: மேழிச் செல்வம் பத்திரிகையில் மாதந்தோறும் கேள்வி பதிலைப் படிப்பதற்கு ஆவலுள்ளவனாய் இருக்கிறேன். ஆகையால் பத்திரிகைக்குரிய சந்தா ஓராண்டுக்கு ரூபாய் 3.00 என்று பத்திரிகையில் உள்ளதே தவிர எங்கு அனுப்புவது என்ற சந்தேகம் எனக்கு உள்ளது. தங்களுக்கே (விஸ்தரிப்பு நிபுணர், கோவைக்கு) அனுப்பலாமா? பதிலை எதிர் பார்க்கிறேன்.

ப: மேழிச் செல்வத்திற்கு ஓராண்டுச் சந்தா ரூபாய் 3·00-ஐ உங்களுடைய வெள்ளக் கோயில் வட்டார விவசாயக் கிடங்கில் கட்டி ரசீது பெற்றுக் கொண் டால் போதும. விவசாயக் கிடங்கில் இருந்து தாங்கள் சந்தா கட்டியுள்ள விபரம் சென்னை விவசாய செய்தித் துறைக்கு அனுப்பப்பட்டு மேழிச் செல்வம் பிரதி ஒவ்வொரு மாதமும் தங்களுக்கு வந்து சேரும்.

என். எஸ். ஆர். சுப்பன் செட்டி, பணைகாடு, மதுரை.

கே.—இங்கு ஆரஞ்சு பழத்தோட்டத்தில் சாம்பல் நோய் (பவுடரிமில்டியூ) அதிகமாக பரவியுள்ளது. கந்தகத் தூளினால்ஓரளவுக் கடடுப்படுத்த இயன்றதென்றாலும்

செடியே அதற்கு எதிர்ப்பு சக்தி கொண்டதாகச் செய்தால் மிகவும் உபயோகமாயிருக்கும். இந்நோயிற்கு உணவுச் சத்து குறைபாடு காரணமாக உள்ளது. என்பதையும் எந்த இரசாயனப் பொருள் இந் நோயிற்கு செடியின் இயற்கையான எதிர்ப்பு சக்தியை வளர்க்கும் என்பதையும், இந்நோயை முழுக்க ஒழிக்க வேறு வழிமுறை உள்ளதா என்பதையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ப.—எவ்வகை உணவுச் சத்துக் குறைபாடும் இந் நோயிற்குக் காரணமல்ல. குறைவான உஷ்ண நிலையும் குளிர்ந்த காற்று மண்டலமும் (humidity) சாம்பல் நோய் பரவ ஏதுவாக உள்ளது. இந் நோயைத் தடுக்க நன்றாக அரைக்கப்பட்ட கந்தகத் தூளை தூவுவதே மிகவும் நல்லது. 'டைதேயோ கார்போனேட்' என்ற மருந்து தெளித்தலும் நல்ல பலனைக் கொடுக்கும்.

A.K.S.T. சுந்தரராஜ் செட்டியார்,
மலைப்பட்டி, விருதுநகர்.

கே.—கார்த்திகை மாத மேழிச் செல்வ இதழில் எஸ்.பி வெங்கடசாமி செட்டியார், கோட்டூர் அவர்கள் சி. எஸ். எச். 1 வீரிய ஒட்டுச் சோள விதையைப் பற்றி எழுதியிருந்தார். நான் அதைப் படித்து அதுபோல் என் தோட்டத்தில் மேற்படி விதையை போட்டு பயிர் செய்ய ஆவலுள்ளவனாய் இருக்கிறேன். மேற்படி விதை எங்கு கிடைக்கும் என்றும் மேற்படி விதை ஒரு கிலோ என்ன விலை என்றும், எழுதினால் மிகவும் நலமாக இருக்கும். மேற்படி விபரங்கள் எனக்கு எழுத வேணுமாய் மிக பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ப.—சி. எஸ். எச். 1. சோளம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய பெருமளவில் விவசாயத் துறையினரால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சென்னை விதைக் கார்பரேஷன் (Seed Corporation, Madras) விதை உற்பதி செய்து விநியோகம செய்ய ஏற்பாடு செய்யபபட்டு வருகிறது

இப்போது கீழ்கண்ட விதை உற்பத்தியாளரும் விற்பனையாளர்களுமான ஒருவரிடமிருந்து விதையைப் பெற்றுக்கொள்ளலாம். விலை முதலிய விபரங்களுக்கு அவர்களை அணுகவும்.

1. கோயம்புத்தூர் விதை கார்ரேஷன், பேரூர் அஞ்சல், கோயமபுத்தூர்—10.

2. 'எஸ்ஸெம்பி' விதை உற்பத்திப் பண்ணை, சிங்காரம்பாளையம் அஞ்சல், கிணத்துக்கடவு வழி கோயம்புத்தூர் மாவட்டம்.

3. டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி, உர இலாகா, கோவை.

வி. பி. ஜவஹர், சி. அரசூர், கொமராட்சி.

கே.—நெற்பயிரின் பூரண பயனடைய யூரியா, பாஸ்பேட், பொட்டாஷ், மங்கனீஸ் சல்பேட் போன்ற பல்வேறு இரசாயன உரங்களைக் குறித்த அளவு போட வேண்டுமாம். அப்படி எல்லா உரங்களும், எல்லா இடத்திலும் குறிப்பாக கிராமத்தில் சிதம்பரம் போன்ற சிறிய நகர்ப்புறத்தில்கூட கிடைக்கவில்லையே. இந்நிலையில் விவசாயிகள் என்ன செய்யலாம்? இவைகள் எல்லாம் சேர்ந்த தங்களால் சிபாரிசு செய்யக்கூடிய கலவை உரம் உள்ளதா? எது? அதை குறுவை, சம்பா தாளடி பயிர்களுக்கு எவ்விதம் உபயோகித்தால் முழு பலனை அடையலாம்? அரசாங்கமும் விவசாயக் கல்லூரியும் எந்த கலவை உரத்தை சிபாரிசு செய்கிறது?

ப.—தென்னாற்காடு மாவட்டத்தில் நெற்பயிரின் பூரண பலனை அடைய ஏக்கருக்கு 30 ராத்தல் தழைச் சத்தும், 30 ராத்தல் மணிச்சத்தும், 15 ராத்தல் சாம்பல் சத்தும் இடவேண்டும். மேற்படி உணவுச் சத்துக்களை நெற்பயிருக்கு ஏக்கருக்கு 150 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டும் 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும், 30 ராத்தல் மியூரியேட் ஆப்பொட்டாஷ் என்ற இரசாயன உரமும் இடவேண்டும். இந்த இரசாயன உரங்களைக் கூட்டுறவு கிடங்கிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறிய மூன்று உரங்களும் சேர்ந்த கலப்பு உரங்கள் எல்லா இடங்களிலும் கிடைக்கும். வெவ்வேறு பயிர்களுக்கான கலப்பு உரங்களை பல்வேறு கம்பெனிகள் தயாரித்து விற்பனை செய்கின்றன. இக்கலப்பு உரங்கள் எல்லா கிராமங்களிலும் கிடைக்கின்றன.

மாங்கனீஸ் என்ற நுண்ணூட்டகத்தை மாங்கனீஸ் சல்பேட்டாக ஏக்கருக்கு 10 ராத்தல் வீதம் பசுந்தழை உரத்துடன் நெற்பயிருக்கு இட்டால் மகசூல் அதிகரிக்கிறது. மாங்கனீஸ் சல்பேட் கலந்துள்ள கலப்புரம் இன்னும் தயார் செய்து விற்பனைக்கு வரவில்லை.

ஒவ்வொரு கலப்பு உரத்திலும் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகியவைகள் இருக்கவேண்டிய அளவு அரசினரால் நிர்ணயிக்கப்பட்டு அதன்படியே எல்லா கம்பெனிகளும் கலப்பு உரங்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றன. ஆகையால் குறிப்பிட்ட எந்த கம்பெனியின் கலப்புரத்தையும் சிபாரிசு செய்யாமல் ஒவ்வொரு பயிருக்கும் தகுந்த கலப்புரம் சிபாரிசு செய்யப்படுகிறது. நெற்பயிருக்கு ஸ்டாண்டர்டு மிக்சர் நம்பர் 1 என்ற கலப்புரம் சிபாரிசு செய்யப்படுகிறது இக்கலப்புரத்தை ஏக்கருக்கு 120 கிலோ வீதம் நிலத்தை சமப்படுத்துமுன் கடைசி உழவிலிடவேண்டும்.

கருணைக் கிழங்கு சாகுபடி

பெரம்பலூர் தாலுக்கா, செங்குணம் கிராமத்தில் பஞ்சாயத்து யூனியன் சேர்மென் திரு. வி. ஆர். சின்னசாமி ரெட்டியார் அவர்களின் நிலத்தில் நல்ல வடிகால் வசதியுள்ள கரிசல் மண்ணில் கரணை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மண்ணின் ஆழம் இரண்டு அடி வரை இருக்கின்றது.

பருவம்.—ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதிக்குப் பிறகு மே மாதம் 30-ஆம் தேதி வரையிலும் கரணை நடவுக்கு ஏற்ற பருவமாகும். கிழங்கின் வயது ஒன்பது மாதம். ஆனால் மார்க்கட் நிலவரத்தை அனுசரித்து 10 அல்லது 11 மாதங்கள் வரையிலும் அறுவடை நீடிக்கச் செய்யலாம். அறுவடையின் பெரும் பகுதி பிப்ரவரி மாதத்தில் நடைபெறுகிறது.

மாற்றுப் பயிர்.—நெல் அறுவடைக்குப் பிறகு கரணை சாகுபடி செய்வது நல்ல பலனைத் தருகிறது. கரணை அறுவடைக்குப் பிறகும் அதே நிலத்தில் நெல்லும் சாகுபடி ஆகிறது. செடியின் மேல் பாகம் நெல் வயலுக்கு நல்ல தழையாகவும் உபயோகப் படுத்தப்படுகிறது. ஓர் ஆண்டில் ஒரு நிலத்தில் ஒரு கரணைப் பயிரும், ஓர் நெல் பயிரும் சாகுபடி செய்யலாம்.

நிலவளம் தயாரிப்பு.—நெல் அறுவடைக்குப் பிறகு மண் நன்ருக புழுதியாக இருப்பதற்காக நிலத்தை நான்கு முறை உழுதல் வேண்டும். 1½ அடி இடைவெளியில் சுமார் ஓர் அடி உயரமுள்ள பார் பிடிக்க வேண்டும்.

எருவிடுதல்.—கடைசி உழவிற்கு முன்பு எக்கர் ஒன்றுக்கு சுமார் 25 வண்டி வீதம் மாட்டு எரு இட்டு நன்கு உழுதல் வேண்டும்.

விதைப்பு.—எக்கர் ஒன்றுக்கு 60 கிலோ எடையுள்ள 12 மூட்டைகள் விதைக் கிழங்குகள் தேவைப்படுகின்றன. மிகவும் சிறிய கிழங்குகள் விதைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. முழுக் கிழங்குகள் அப்படியே விதைக்காக உபயோகப்படுத்தப்படுகின்றன. பாரில் ஓர் அடிக்கு ஓர் கிழங்கு வீதம் இட்டு கிழங்கை நன்கு மூடி வெளியில் தெரியாமல் மண் அணைத்தல் வேண்டும்.

பின்செய் நேர்த்தி.—கிழங்கு முளைத்து ஒரு மாதத்திற்குள் ஓர் களையும் அதன் பிறகு சுமார் நான்கு முறை நன்கு களை எடுக்கப்பட்டது. ஒவ்வொரு தடவையும் களை எடுத்த பிறகு பார்களில் கிழங்கு வெளியே தெரியாமல் நன்கு மண் அணைக்கப்பட்டது.

திரு வி. ஆர். சின்னசாமி ரெட்டியார்.

நீர்பாசனம்.—நிலத்தில் பார் பிடித்த பிறகு நீர் பாய்ச்சி கிழங்கு நடுதல் வேண்டும். பிறகு வாரத்திற்கு ஓர் முறை நீர் பாய்ச்சுதல் அவசியம். மழை காலத்தில் நீர் பாய்ச்ச அவசியம் இல்லை. தண்ணீர் அதிகமாக வயலில் தேங்கி நின்ருல் கிழங்கு அழுக நேரிடும். ஆகையால் உடனடியாக தண்ணீர் வடிய வசதி செய்தல் வேண்டும்.

பயிர் பாதுகாப்பு.—இதுவரையிலும் இந்தப் பயிருக்கு பூச்சியோ வியாதியோ வந்ததில்லை.

அறுவடை.—நடவுக்குப் பிறகு ஒன்பதாவது மாதம் முதல் 11-வது மாதம் வரையிலும் அறுவடை செய்யலாம். மண்வெட்டி, அருகு வெட்டி, பெரிய களை

கொத்து ஆகியவைகளைக் கொண்டு கரணைக் கிழங்கை பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்படுகிறது. அறுவடைக்குப் பிறகு கிழங்கை நிழலில் உலர வைத்து தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. மிகவும் சிறிய கிழங்குகளை நன்கு நிழலில் சுமார் 15 தினங்கள் உலர வைத்து பட்டரையில் வைத்து விதைக்காக சேமித்து வைக்கப்படுகிறது. பெரிய கிழங்குகளை 60 கிலோ கொண்ட மூட்டைகளாக தைத்து திருச்சி, மதுரை, விழுப்புரம், திண்டிவனம், சென்னை போன்ற ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மகசூல்.—எக்கர் ஒன்றுக்கு 60 கிலோ எடையுள்ள 250 மூட்டை கிழங்குகள் கிடைக்கும். ஓர் மூட்டையின் விலை சுமார் ரூபாய் 10 ஆக இருக்கிறது. ஆக ஒரு எக்கர் சாகுபடியிலிருந்து ரூபாய் 2,500 மொத்த வருமானமும், சாகுபடி செலவு ரூபாய் 500 நீக்கி எக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய் நிகர வருமானமும் கிடைக்கிறது.

சாகுபடி செலவுகள்

	ரூ.	பை.
1. ஆரம்ப உழவு நான்கு முறை உழுவதற்கு எக்கர் ஒன்றுக்கு ஓர் உழவுக்கு இரண்டு ஏர் வீதம் 8 ஏர்களுக்கு (ஏர் ஒன்றுக்கு ரூ. 3 வீதம்)	24	00
2. 25 வண்டி மாட்டு எரு வண்டி ரூ. 3 வீதம் செலவு.	75	00
3. 60 கிலோ கொண்ட 12 மூட்டை விதைக் கிழங்கின் விலை (மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம்.)	120	00
4. பார் பிடித்தல் எக்கர் ஒன்றுக்கு 4 ஆள் வீதம்.	7	00
5. நடவு	10	00
6. ஐந்து தடவை களை எடுக்க ஒரு தடவைக்கு ரூ. 15 வீதம்.	75	00
7. அறுவடை செலவு	25	00
8. நீர்பாசன செலவு	164	00
ஆக செலவு	500	00
மொத்த வருமானம்	2,500	00
சாகுபடி செலவு	500	00
நிகர லாபம்	2,000	00

1966--அரிசி வருடம்

1966-ம் வருடத்தை 'அகில உலக அரிசி வருடமாக' ஐக்கிய நாடுகள் சங்கத்தின் உணவு விவசாய நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதை முன்னிட்டு அரிசி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளுக்கான போட்டி ஒன்றை நடத்தி 1,000 அமெரிக்க டாலர்கள் பரிசு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

16-ம் பக்கத் தொடர்ச்சி.

ப்ராய்லர் தொழிலை அவர் தொடங்கவில்லை. (ப்ராய்லர் தொழிலில் 12 வாரம் வரை குஞ்சுகளை புஷ்டியாக வளர்த்து தின்பதற்கே விற்பது.) காரணம் மின்சக்தி, தண்ணீர் வசதிக் குறைவு. இத்தகைய பறவைகளுக்கு கிராக்கியும் குறைவு.

என்ன சத விகிதம் முட்டை கிடைக்கிறது? 60 முதல் 65 வரை. இது கணிசமான விளைச்சல்தான். ஆண்டு முழுதும் இந்த ரீதியில் அவர் பண்ணையில் முட்டை கிடைக்கிறது.

"தீனிக்கலவையை நீங்களே கலந்து கொள்ளாதீர்கள், பொறுப்புள்ள வர்த்தகரிடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள்" என்கிறார் அவர்.

தீனிக்கலவை செய்யும் சிரமம் மிச்சம். நாமாகக் கலப்பதை விட விஷயம் தெரிந்தவர் கலந்து தரும் தீனியால் பலன் அதிகம் என்கிறார் அவர்.

ஸ்ரீமதி ஆப்தே ப்ரூடர்களை தானே தயாரித்துக் கொள்கிறார். செயற்கை ப்ரூடர்களை பயன்படுத்துவதில்லை. காரணம், அவை துப்புரவாக சுத்தம் செய்யப்படாவிட்டால் குஞ்சுகள் சாக ஏதுவாகிறது என்பதுதான்.

குஞ்சுகளின் சாவைக் குறைக்க வேண்டுமானால் கவனமாக சாவின் காரணத்தை கவனித்து அதை விலக்க வேண்டும் என்கிறார் அவர்.

கருத்தாகவும் பற்றுடனும் பறவைகளைப் போஷித்தால் நல்ல 'பலன்தான்' என்பது அவருடைய அனுபவம் தெரிந்த கொள்கை.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா, உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்
கிடைக்குமிடம் :—
ராஜா பண்ணைத் தோட்டம்
2, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்,
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி : RAJSEED — போன் : 42262

சென்னை மாநில விளை-புல ஆய்வு நிறுவனம்

ஆர். சௌந்தரராசன், விளை-புல ஆய்வு அலுவலர், கோவை.

எல்லா விவசாய அபிவிருத்திகளுக்கும் உபயோகமாயும் மற்றும் பொறி இயல் திட்டங்கள் வகுப்பதற்கு பயன் படக்கூடியதாயுமுள்ள ஒரு பொதுவான (Standard) மதிப்பீடு தமிழ்நாடு பூராவாக நடத்துவதற்கு மாநில அரசாங்கம் ஒரு விளை புல ஆய்வு நிறுவனம் ஒன்றை கோவை விவசாயக் கல்லூரியில் ஏற்படுத்தி இருக்கிறது. இதன் அடிப்படை நோக்கங்கள் :—

(1) தமிழ் நாட்டிலுள்ள எல்லா நிலங்களையும் காடுகள் ஆற்று நீர் பாசனமுள்ள பூமி நீங்கலாக சுற்றிப்பார்த்து ஆங்காங்கே சோதனை குழிகளையும் வெட்டி பரிசீலனை செய்து, நிலங்களின் தன்மையையும் வளத்தையும் கவனித்து, ஒவ்வொன்றின் எல்லைக் கோடுகளை வரைந்து விஸ்தீர்ணத்தையும் கணக்கிடுவது.

(2) ஒவ்வொரு தன்மையுள்ள இடங்களிலும் இப் பொழுது சாகுபடியாகும் பயிர்களையும் அவை களுக்காக செய்யப்படுகிற விவசாய வேலைகளையும், மற்றும் இடுகிற உரம் முதலிய விவரங்களையும் அறிந்து, அவை களுக்கு ஏற்ற பயிர்களைப்பற்றிய யோசனைகளை சொல்லு வது.

(3) தீவிரமான விவசாய அபிவிருத்தி திட்டத்திற்கு உட்பட்ட இடங்களிலும், மற்றும் பிரச்சினையுள்ள பூமி களிலும் ஒவ்வொரு தன்மையுள்ள இடங்களில் சில பாகங்களிலும் விரிவான முறையில் பூமியில் பரிசீலனை செய்வது.

(4) மேலே குறிப்பிட்ட முறையில் பூமியை மதிப்பிட்டு மண்வளம் குன்றுமலும், பூமியில் உள்ள தண்ணீர் (ஈரம்) வீண் ஆகாமல் இருக்க யோசனைகள் சொல்வது.

அதற்காக முதலில் பூமியின் நோட்டத்தை அறியும் பொருட்டு சுற்றி பார்வையிட்டு, ஒவ்வொரு தன்மையுள்ள இடத்திலும் அதனுடைய குணங்களை நன்றாக அறியும் பொருட்டு 4 அடி நீளம், 4 அடி அகலம், 6 அடி ஆழமுள்ள சோதனைக் குழிகளை வெட்டி மண்ணை ஆராய் வார்கள். பௌதிக ரசாயன பரிசோதனைகள் செய் வதற்கு அந்த குழியில் பல்வேறு பாகங்களிலிருந்து மண்ணை எடுப்பார்கள். சாதாரணமாக ஒரே மாதிரி இருக் கும் பூமியில் இருந்து 6 மைல் தூரத்திற்கு ஒரு குழி வெட்டி பரிசீலிப்பார்கள். அப்படியில்லாமல் பூமியின் தன்மை குறுகிய இடைவெளியில் மாறினால் அப்படி மாறும் இடங்களில் குழியை வெட்டி பார்ப்பார்கள். இப் படி பரிசோதனை செய்வதால் மண்ணின் ஆழம், நிறம் அதிலுள்ள மணல், களிமண், வண்டல்களின்சேர்க்கை, தண்ணீர் வடியும் தன்மை, பூமியில் ஈரம் இருக்கக் கூடிய நிலை, அமிலம் அல்லது காரம், நிலத்தின் களிமண் அல்லது மற்ற பொருட்களால் கெட்டியான பரப்பு ஏற்பட்டு நீர் வடிவதற்கு குந்தகமான நிலை உண்டாயிருப்பது, மண்ணின் வளம், பூமியின் சரிவு மண் அரிப்பின் நிலை முதலியவை தெரியவரும். பிறகு ஒரேமாதிரியுள்ள இடங்களை தாலூகா படத்தில் குறித்து அவைகளின் எல்லையை தெளிவுபடுத்துவார்கள். அப்படி செய்யப்பட்ட தேசப் படங்கள் பொதுவாக விவசாயத் திட்டங்கள் வரைவதற்கு உபயோகப்படும். இதைத் தவிர மண் அரிப்பு தடுப்புத் திட்டம், நீர்பாசனத் திட்டம் போன்ற தீவிரமான திட்டமிடப்பட்ட இடங்களில் ஒவ்வொரு சர்வே நம்பர் உள்ள இடங்களையும் விவர மதிப்பீடு (Detailed Survey) செய்வார்கள். இப்படிச் செய்யும் பொருட்டு குறைந்தது ஒரு பர்லாங் தூரத்திற்கு ஒரு தடவை மண்ணின் நிறம், ஆழம், சரிவு, மணல், களிமண் வண்டல்களின் தன்மை, மண் அரிப்பின் நிலை முதலியவைகளை கவனிப்பார்கள். நீர்பாசனத் திட்டத் திற்கு பரிசீலனை செய்யப்படவேண்டியிருப்பதால் பூமியில் உள்ள உப்புக்களை மதிப்பிட்டு, களர் உப்பு முதலியவை களால் கெடுதல் ஏற்படுமா என்று ஆராய்வார்கள். பிறகு ஒரே மாதிரி பூமியுள்ள இடங்களை தேசப்படத்தில் கோட் டினால் குறித்து ஒவ்வொரு பாகத்தையும் தெளிவு படுத்துவார்கள். அம்மாதிரி குறிக்கப்பட்ட இடங்களை எந்த முறையில் உபயோகப்படுத்தினால் இலாபகரமாக இருக்கும் என்றும் யோசனை சொல்வார்கள்.

மேலே சொல்லப்பட்ட பூமியின் வரைநிலை மதிப்பீடு (Standard Survey) இப்போது கோயம்புத்தூர் ஜில்லாவில் நடைபெற்று வருகிறது. அங்கே முடிந்த பிறகு அதை மற்ற ஜில்லாக்களில் நடத்துவார்கள்.

1966-ம் ஆண்டு ஜூலை மாதம் அரசினர் தென்னை நாற்றங்காலில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம் பின்வருமாறு :

வரிசை எண்.	இடைக்குமிடம். (1)	கிடைக்கும் எண்ணிக்கை. (2)	ஒரு கன்றின் விலை. ரு. காசு (3)
1.	சோழவந்தான், மதுரை மாவட்டம்.	7,000	0·90
2.	ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்.	8,000	0·90
3.	செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.	3,000	0·90
4.	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.	8,000	0.90
5.	மூவாலூர், தஞ்சாவூர் மாவட்டம்.	7,000	0·90
6.	சிங்கம்புணரி, ராமநாதபுரம் மாவட்டம்.	10,000	0·90
7.	புத்தாலம், கன்னியாகுமரி மாவட்டம்.	5,000	0·90

கூப்பர் டீசல் இன்ஜின்களின்
பல்வேறு உபயோகங்கள்.
கூப்பர் டீசல் இன்ஜின்களை, அவை நீர் இறைப்பதற்கு உபயோ
கிக்கப்படாதபோது, மாவு அரைப்பது, எண்ணெய் எடுப்பது,
மரம் அறுப்பதுபோன்ற மற்றும் இதர வேலைகளுக்குச்
சுலபமாக உபயோகிக்க முடியும். விவசாயத்திற்கு இது
மிகவும் உதவுகிறது.
இதர விசேஷ அம்சங்களாவன:
* வலுவானது மற்றும் சிக்கனமானது-
இலேசான டீசல் எண்ணெயில் ஓடுகிறது.
* ஓட்டுவது சுலபம்.
* உபரி உறுப்புகள் ஏராளமாகக் கிடைக்கின்றன.
* "கூப்பரால் ஒப்பப்பட்ட" சேவை உடனேயே
விநியோகஸ்தர்கள் மூலம் கிடைக்கிறது.
* நீர்ப்பாசனத்திற்குத் தவிர பலவிதங்களிலும்
உபயோகப்படுகிறது.
* ஒரு வருட உத்திரவாதம்.
கூப்பர் CR 8, CR 14, CR 19, CR 26
மற்றும் CR 40 இன்ஜின்கள் 8 லிருந்து 40 BHP வரை
தயாராகக் கிடைக்கின்றன.
கூப்பர்
டீசல் இன்ஜின்
இதை வைத்திருப்பவரிடம் இதைப்பற்றிக் கேளுங்கள்.
CE. 838A TAM
WALCHAND
COOPER
GROUP
கூப்பர்
இன்ஜினீயரிங் லிட்.
விற்பனைப் பகுதி :
டெக்கான் ஜிம்கானு,
பூனு-4, மஹாராஸ்டிரா

வரட்சியில் இருந்து கரும்பைக் காக்க எளிய வழிகள்

ஏ. கே. கதிர்வேலு பி.எஸ்ஸி. (வேளாண்மை), மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.

தோட்டக்கால் நிலப் பகுதிகளில் பருவ மழையின்மையால் கிணறுகளில் நீர் வற்றி விடுவதாலும், நஞ்சை நிலப் பகுதிகளில் மே, ஜூன், ஜூலை மாதங்களில் மராமத்து வேலைகளுக்காக ஆறுகளில் தண்ணீர் வருவது நிறுத்தப்படுவதாலும், நன்கு முளைத்து கிளைத்து வளர்ந்த கரும்புப் பயிர் காய்ந்து விடுகிறது. பின்னர் நீர் விட்டாலும் புதிதாக பக்கவாட்டில் இருந்து வரும் குருத்துத் தான் வளருகிறது. இதனால் மகசூல் குறைவதோடல்லாது சர்க்கரைச் சத்தும் குறைகிறது. இந்த வரட்சியான காலங்களில் குறைந்த அளவு நீரைக் கொண்டு கரும்பைக் காப்பாற்ற பின்வரும் வழிகளை மேற்கொள்ளலாம் :—

சருகு மூடுதல் (Trash Mulching).—

கரும்பு நட்ட 30 நாட்களில் நன்கு முளைத்துவிடும். கரும்பு நட்ட 30 அல்லது 35 நாட்களில், நீர்ப்பாய்ச்சிய இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின் மண்பதமாக இருக்கும்போது ஒரு மண்வெட்டிக் கொத்தும், கைக்களை ஒன்றும் கொடுக்கவும். இதனால் களை நீக்கப்படுவதுடன் மண்ணும் பொலபொலப்பாக்கப்பட்டு வேர் நன்கு வளர்ச்சியடையவும் காற்று செல்லவும் ஏதுவாகிறது. பின்னர் மண்வெட்டிக் கொத்து கொடுத்த அன்றோ அல்லது மறுநாளோ, கரும்பு வரிசைகளுக்கிடையே உள்ள கட்டைகளில் (Ridges) 4” அல்லது 6” உயரத்திற்கு கரும்புச் சருகை ஒரே சீராகப் பரப்பவும். காற்று தூக்காதிருப்பதற்கு மண்ணை பாரமாக வைக்கவும். இப்படி மூடுவதன் மூலம் களை முளைப்பதற்கு வேண்டிய காற்று, சூரிய ஒளி முதலியவை தடைபடுவதால், களை அமுக்கப்பட்டு, அழிந்து விடுகின்றது. மேலே சருகு மூடுவதினால் அதன் அடியில் உள்ள மண்ணின் ஈரம் எளிதில் ஆவியாகச் செல்லாது (Evaporation) தடுக்கப்படுவதால் ஈரத்தன்மை பாதுகாக்கப்படுகிறது. இதனால் மண்ணில் ஈரம் நீண்ட நாட்களிருப்பதால், மாதம் நான்கு முறை நீர்ப்பாய்ச்ச வேண்டிய பகுதிகளில் இரு முறை பாய்ச்சினாலே போதுமானது. நான்கு அல்லது ஐந்து மாதங்களில் கரும்புக்கு மண் அணைக்கும்போது இந்த சருகை எடுத்துவிட்டு மண் அணைக்கவும்.

பாசன வசதி தட்டுப்பாடில்லாத நிலங்களில் இந்த சருகை கரும்பு வரிசைகளுக்கிடையில் வைத்து மண் அணைக்கலாம். நீர் குறைவான இடங்களில் இச் சருகை எடுத்து கம்போஸ்ட் தயாரிக்கலாம்.

சருகு மூடுதலும் நீர்பாய்ச்சுதலும்—

கரும்பு நட்ட 45–50 நாட்களில் கரும்புக்கு மண் அணைக்கவும். பின்னர் நீர்ப்பாய்ச்சி அந்த ஈரத்திலேயே காய்ந்த கரும்புச் சோகையால் ஓர் இடங்கு விட்டு ஒரு இடங்கில் போடவும். நீர் பாய்ச்சுவதற்கு முன்னால் சருகு வைத்த இடங்கில் நீர் செல்லாது முதலிலேயே அடைத்து விடவேண்டும். பின்னர் சருகு போடாத இடங்கில் மட்டும் நீர்ப்பாய்ச்சவும். அதனால் நீர்ப்பாய்ச்சிய இடங்கில் இருந்து, நீர் கசிந்து சருகு மூடப்பட்ட இடங்கு முழுவதும் பரவுகின்றது. இவ் விதம் பரவிய ஈரத் தன்மை எளிதில் ஆவியாகாமல் மூடியுள்ள சருகினால் தடை செய்யப்பட்டு, ஈரம் காக்கப்படுகின்றது. இப்படிச் செய்வதினால் சாதாரணமாக ஒரு ஏக்கர் பாய்ச்சுவதற்கான நீரைக் கொண்டு இரு ஏக்கர் பாய்ச்சலாம். இதனால் சருகை வயலில் இருந்து அப்புறப்படுத்த வேண்டிய செலவும் குறைகின்றது. இதை நிரூபிக்கும் வகையில் ராசதானிக் கோட்டை பண்ணையில் ஒரு பரிசோதனை நடத்தப்பட்டது. சாதாரண முறையை விட இம் முறையில் 27 சத வீதம் அதிக மகசூல் கிடைக்கப்பெற்றதுடன் சர்க்கரை சத்தும் கூடுகிறது என்பது தெரியவந்தது.

நீர்க்கசிவுப் பாசனம் (Seapage irrigation).—

கரும்பு வரிசைகட்கு நடுவேயுள்ள இடங்குகளில் (furrow) வேர்கள் பாதிக்கப்படாது மண்வெட்டியினால் ஒரு அடி ஆழத்திற்கு நன்கு வெட்டிப் புரட்டவும். இவ்வாறு மண் நன்கு கிளரப்படுவதால் வேர்கள் சுலபமாகச் சென்று உணவை உறிஞ்சவும் பயிர் கிளைக்கவும் எளிதாகின்றது. 30 அல்லது 35 அடி இடைவெளி விட்டு கரும்பு வரிசைகட்கு சமமாகவும் (Parallel) குறுக்காகவும் அமையுமாறு கால்வாய்கள் (irrigation channels) படத்தில் காட்டியுள்ளது போல் அமைக்கவும். இநத கால்வாய்கள் 1 முதல் 2 அடி அகலமும்,



[30-ம் பக்கம் பார்க்கவும்

வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

திருச்சி அகில இந்திய வானொலி மூலம் விவசாயிகளுக்காக ஒவ்வொரு நாளும் இரவு 7-30 முதல் 8-00 வரை விவசாய நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவது உங்களுக்கு தெரியும். இவ்வொலிபரப்பில் விவசாய சம்பந்தமான விஷயங்கள் அனைத்தும் இடம்பெறுகின்றன. இவ்விவசாய ஒலிபரப்பை நீங்களும் கேட்டு வருகிறீர்களென நம்புகிறேன். நீங்கள் இதனை தொடர்ந்து கேட்டு வருவதால், இவ்வொலிபரப்பைப்பற்றிய தங்கள் கருத்துரையை எனக்கு எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு இவ்வொலிபரப்பு எப்படி அமையவேண்டும், எந்த முறையில் ஒலிபரப்ப வேண்டும் என்பதற்கும் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி அனுப்புங்கள்.

தங்கள் நலனை பெரிதும் விழையும்,

து. கணபதி,

வானொலி விவசாய அலுவலர்,
36B, மௌண்ட் ரோட்,
சென்னை–2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை !

பஞ்சாப் பருத்திக்கு உரமிடுதலும் பயிர் பாதுகாப்பும்

பஞ்சாப் பருத்தி குறைந்த வயதுடையதாலும், அதிக நீர் தேவையில்லாததாலும், கோடையில் நெல் அறுவடைக்குப்பின் வயல்களிலும், நீர்ப்பாசன வசதியுள்ள தோட்டக்கால்களிலும், பயிரிடலாம். தை, மாசி மாதங்களில் இதைப் பயிரிடலாம். நிலத்தை இரும்புக் கலப்பையால் உழுதபின் ஐந்து முதல் பத்து டன் வரை நன்றுக மக்கிய பசுந்தாள் உரம் அல்லது மாட்டு எரு இட வேண்டும். 18 கிலோ தழைச்சத்து தரும் 90 கிலோ அமோனியம் சல்பேட், எழு கிலோ மணிச்சத்து தரும் 45 கிலோ சூப்பர் பாஸ்பேட், எழு கிலோ பொட்டாஷ் சத்து தரும் 16 கிலோமியூரியேட் ஆஃப் பொட்டாஷும் இட வேண்டும். மணிச்சத்து, பொட்டாஷ் சத்து தரும் உரங்களை கடைசி உழவிற்கு முன் இட்டுப் பார் பிடித்து விதைகளை ஊன்ற வேண்டும். 45 கிலோ அமோனியம் சல்பேட்டை விதைத்த 50–55 நாட்களில் வைக்க வேண்டும். மேற் சொன்ன உரங்களுக்குப் பதிலாக கலப்பு உரம் எண் 2-ஐ கடைசி உழவிற்கு முன் இட்டு, பின்னர் விதைத்த 50 நாட்களுக்குப் பின் 40 கிலோ அமோனியம் சல்பேட்டும் இடலாம். பின்வரும் பயிர்பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும் :—

1. ஒரு எக்கருக்கு தேவையான எழு கிலோ கிராம் பொறுக்கு விதையை 20 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்துடன் கலந்து பின்பு விதைகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் இருப்பதற்காக சாணிப்பாலுடன் தேய்த்து எடுத்து நிழலில் உலர்த்தி விதையை விதைக்க வேண்டும்.

2. விதைத்த 20 நாட்களில் களை எடுத்த பின் எக்கர் ஒன்றுக்கு ஒரு டின் (250 மில்லி லிட்டர்) எண்டிரினை 400 லிட்டர் (200 பக்காபடி) தண்ணீரில் கலந்து மருந்து தெளிக்கும் கருவியால் தெளிக்க வேண்டும்.

3. விதைத்த 35-வது நாளில் 200 சி.சி. பாரத்தியான் மருந்தை ஒரு கிலோ காப்பர் மருந்துடன் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

4. 50-ம் நாள் $1\frac{1}{2}$ கிலோ பி.எச்.சி. 50 சதவிகிதம் மருந்தும், $1\frac{1}{2}$ கிலோ டி.டி.டீ. 50 சதவிகிதம் மருந்தும் கலந்து 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

5. 70-ம் நாள் 200 சி.சி. பாரதியானை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

6. 85-ம் நாள் 70-ம் நாளில் செய்தது போலவே 200 சி.சி. பாரதியானை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

7. காய் வெடிக்கும் பருவத்தில் சிவப்பு உண்ணி தாக்காமலிருக்க எக்கருக்கு 10 கிலோ கந்தகத்தூளை தூவலாம். அல்லது $1\frac{1}{2}$ கிலோ ஈர கந்தகத்தை 500 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்.

இவ்விதம் பயிர் செய்தால் எக்கருக்கு 600 முதல் 800 கிலோ பருத்தி மகசூலும், ரூ. 400 முதல் ரூ. 600 வரை நிகர லாபமும் பெறலாம்.

[1—4—1966 அன்று திரு. புருஷோத்தமன், பிரத்தியேக மாவட்ட விவசாய அலுவலர் (பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் திருச்சி) அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்].

கரும்புக்கு உரமிடுதல்

கரும்பு சாகுபடி செய்வதற்கு முன் பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடிசெய்து, மடக்கி நிலத்திலேயே உழுது விடலாம். அவ்வாறு செய்யாவிட்டால் கரும்பு நட்டபின் கரும்பு வரிசைகளுக் கிடையில் பசுந்தாள் உரப்பயிர்களை விதைக்கலாம். சீமை அகத்தியை கரும்பு நடவின் போதோ அல்லது சில நாட்கள் கழித்தும் சணப்பு பயிரை கரும்பு நட்ட 45 நாட்களுக்குப் பின்னும் விதைக்கலாம். வளர்ந்தப்பின் பசுந்தாள் பயிரை மடக்கி மண் அணைக்க வேண்டும். பசுந்தாள் பயிர் சாகுபடி செய்யவில்லையானல் எக்கருக்கு 20 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்டோ கடைசி உழவுக்கு முன் இடவேண்டும்.

அமோனியம் சல்பேட், யூரியா, கால்சியம் அமோனியம் நைட்ரேட், அமோனியம் சல்பேட் நைட்ரேட் போன்ற தழைச்சத்து உரங்களை இடலாம். பிண்ணுக்கையும், செயற்கை உரங்களையும் 1-க்கு 2 என்று தழைச்சத்து அடிப்படையில் கணக்கிட்டு இடவேண்டும். பிண்ணுக்கு இடவில்லையானுல் 28 கிலோ மணிச்சத்து தரும் சூபர் பாஸ்பேட்டையும், 36 கிலோ சாம்பல்சத்துதரும் மியூரியேட் ஆஃப் பொட்டாஷையும் உரமாக இட வேண்டும். அந்த அளவு உரச்சத்தை 750 கிலோ கலப்பு உரம் எண் 11 அல்லது 10-ன் மூலமாகவும் கொடுக்கலாம். வெல்லம் காய்ச்சும் இடங்களுக்கு 70–90 கிலோ தழைச்சத்து உரமிடலாம். ஆலை வட்டாரங்களுக்கு 90 முதல் 115 கிலோ தழைச்சத்து இடலாம். இந்த எருக்களை நடவான 45 நாட்களுக்குப் பிறகு, 3–4 மாதங்களுக்குள்ளும் ஆக இரு தடவைகளில் சமமாகப் பிரித்து இடவேண்டும். முதல் முறை கரும்புத் தூருக்கு பக்கத்தில் 3–4 அங்குல இடைவெளியில் குழி போட்டு உரமிட்டு மூடி நீர்ப்பாய்ச்ச வேண்டும். இரண்டாவது உரம் இடங்கிலிட்டு லேசாக மண் அணைத்து விட வேண்டும். இரண்டாவது முறையில் இடப்படும் யூரியாவின் அளவைக் குறைத்து 25 கிலோவை 1,000 லிட்டர் நீரில் கரைத்து தெளிப்பான் மூலம் 90–வது நாளிலும், மற்றொருமுறை 100-வது நாளிலும் இலைகளின் மேல்

தெளிப்பதால் நல்ல மகசூல் அளிக்கிறது என்பதை சமீபகால சோதனைகளின் முடிவுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

(8—4—1966 அன்று. திரு. எம். சண்முகம், கரும்பு பெருக்கு அலுவலர், திருச்சி அவர்களின் உரைச் சுருக்கம்).

சித்திரைப் பட்டத்திற்கு உகந்த காய்கறிகள்

கத்தரி, தக்காளி, வெண்டை, தட்டைப் பயறு, முள்ளங்கி, வெள்ளரி, கீரை வகைகள் சித்திரைப் பட்ட சாகுபடிக்கு உகந்தவை. கத்தரி, தக்காளி, வெண்டை, தட்டைப் பயறு, முள்ளங்கி முதலிய பயிர்களுக்கு 36 டன் வீதம் கம்போஸ்ட் உரமோ தொழு உரமோ இடவேண்டும். கடைசி உழவுக்குப் பின் ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர், 50 கிலோ பொட்டாஷ், 25 கிலோ அமோனியம் சல்பேட்டும் இட்டு பார் பிடிக்க வேண்டும். கத்தரிக்கும், தக்காளிக்கும், நாற்றங்கால் ஏற்படுத்தி கத்தரி நாற்றுக்களை விதைத்த 30 நாட்களிலும், தக்காளி நாற்றுக்களை விதைத்த 20 நாட்களிலும் பறித்து நட வேண்டும். எச். 128 கொத்து வெள்ளை, எச். 158 குடியாத்தம், எச். 129 நீண்ட ஊதா ஆகிய கத்தரி ரகங்களும் எச். 123 மீருட்டி, எச். 139 மார்டன் ஆகிய தக்காளி ரகங்களையும் பயிரிடலாம். ஏக்கர் நடவுக்கு ஒரு சென்ட் நிலத்தில் 120 கிராம் கத்தரி விதையும், 90 கிராம் தக்காளி விதையும் விதைக்க வேண்டும். நட்ட 30 நாட்களில் களையெடுத்து 25 கிலோ அமோனியம் சல்பேட் உரமிட்டு மண் அணைக்க வேண்டும். என்டிரின் அல்லது டி.டி.டீ. 50 சத மருந்தை நாற்று நட்ட 15 நாட்களில் தொடங்கி 15 நாட்களுக்கு ஒரு முறை மூன்று முதல் ஐந்து தடவை தெளிக்க வேண்டும். எச். 483 பூசாசவாணி, ஏ.ஈ. 8 இந்தியன் வெண்டை, ஏ.ஈ. 9 சாமல்கோட்டை வெண்டை போன்ற வைரஸ் வியாதி தாக்காத ரகங்களைப் பயிரிடலாம். ஏக்கருக்கு 2½ கிலோ விதை தேவை. விதைத்த 15 நாள் தொடங்கி 10 நாட்களுக்கொரு முறை என்டிரின் மூன்று தடவைகள் தெளிக்க வேண்டும். ஈ.சி. 455 என்ற தட்டைப் பயறு ரகம் 45 நாள் தொடங்கி 90 நாட்கள் வரை காய்க்கும். வருட முழுவதும் பயிரிடக்கூடிய எச். 113 என்ற வெள்ளை முள்ளங்கி ரகம் உகந்தது.

நீர் வற்றிய ஏரிகளிலும் தோட்டங்களிலும் 75 சென்டிமீட்டர் இடைவெளியில் குழிகள் தோண்டி, குழிக்கு 2–3 விதைகள் போட்டு வெள்ளரி பயிர் செய்யலாம். தண்டுக்கீரை, அரைக்கீரை, பொன்னாங்கனி, கொத்தமல்லி, வெந்தயக்கீரை போன்ற குறுகிய காலப் பயிர்களையும் சாகுபடி செய்யலாம்.

(12—4—1966 அன்று திரு. கே. ஆர். ராமன், உதவி தோட்டக்கலை நிபுணர், கோயமுத்தூர் ஆற்றிய உரையின் சுருக்கம்).

நீலகிரியில் உருளைக்கிழங்கு சாகுபடி

நீலகிரியில் உருளைக்கிழங்கு கார்போகம், கடைபோகம், தண்ணீர் போகம் ஆகிய மூன்று பருவங்களில் பயிரிடப்படுகிறது. உருளைக்கிழங்கு போடுமுன் லூபின், பக்வீட் போன்ற பசுந்தழை பயிரிடுதல் நல்லது. கிரேட்ஸ்காட், பிரசிடண்ட் போன்ற வகைகள் சாகுபடியிலுள்ளன. ஐந்து டன் தொழு உரம், 800 முதல் 900 கிலோ நஞ்சநாடு எருக்கலவையும் ஏக்கருக்கு இடவேண்டும். நோயற்ற சராசரி 40 முதல் 50 கிராம் எடையுள்ள விதைகள் சிக்கனமானவை. சுமார் 25 சென்டிமீட்டர் ஆழம் வரை முள்ளால் திருப்பி, நிலத்தை பண்படுத்தி இயற்கை உரமிட்டு பரப்பிவிட வேண்டும். 15 நாட்களுக்குப் பின் 40 முதல் 50 சென்டிமீட்டர் வரை இடைவெளியில் பார் எடுத்து, விதைகளை பாரில் 20 முதல் 25 சென்டிமீட்டர் இடைவெளியில் வைத்து உரமிட்டு பார்களை மூடிவிட வேண்டும். களைகள் தோன்றும்போது களையெடுக்க வேண்டும். செடி 30 சென்டிமீட்டர் அளவு வளர்ந்ததும் மண்கட்ட வேண்டும். நோய் வராமலிருக்க தாமிரக் கலவை மருந்தை 2 முதல் 2½ கிலோவை 1,120 லிட்டர் நீரில் கலந்து நோய் வருவதற்கு முன் தெளிக்க வேண்டும். பின் 10–15 நாட்களுக்கொருமுறை தெளிக்க வேண்டும். வெட்டுப் புழுக்களின் சேதத்தைத் தடுக்க டி.டி.டீ. அல்லது பி.எச்.சி. மருந்துகளை தாமிரக் கலவை மருந்துகளுடன் சேர்த்து தெளிக்கலாம். கிழங்குகளை அறுவடை செய்தவுடன் நோயுள்ள கிழங்குகளை நீக்கிவிட்டு, தரம் பிரித்து, கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் விற்று நல்ல பலன் பெறலாம்.

(15—4—1966 அன்று ஒலிபரப்பப்பட்ட திரு. கே. அச்சுத குருப், கண்காணிப்பாளர், நஞ்சநாடு விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, அவர் தம் உரையின் சுருக்கம்).

"சிக்ரி" சாகுபடி

"சிக்ரி" என்பது சிக்ரி செடியின் சதைப் பாங்கான வேரைக் காய வைத்து தூள் செய்வதால் கிடைக்கும் பொருளேயாகும். இது களிமண் சத்துள்ள மணற்பாங்கான மண்ணில் நல்ல பலனைத் தருகிறது. செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. நிலத்தை நன்றாக உழுது ஏக்கருக்கு 15 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். இத்துடன் 45 கிலோ சூப்பரையும் இடுதல் நல்லது. 30-45 சென்டிமீட்டர் இடைவெளியில் பார் பிடிக்க வேண்டும். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படும். விதைகளை மணலுடன் கலந்து, பாரின் மேல் குச்சியினால் கோடிட்டு அந்தப் பள்ளத்தில் விதைகளைத் தூவி மண்ணால் லேசாக மூடவேண்டும். விதைத்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். ஒரு வாரம் அல்லது 10 நாள் வரை ஒருநாள்விட்டு ஒருநாள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த இரண்டு வாரத்தில் களையெடுத்து, ஒரு மாதமானபின் 20–25 சென்டிமீட்டருக்கு ஒரு செடி இருக்கும்படி கலைத்தல் வேண்டும். மண்ணில் தேவைக்கு அதிகமான ஈரம் இருந்தால் "கிழங்கு கூழக்கக் கூடிய நோய்" தோன்றி சேதமேற்படும். நல்ல வடிகால் வசதி செய்தல் வேண்டும். 4–4½ மாதத்தில் கிழங்கு அறுவடைக்குத் தயாராகும். அதிகாலையில் நீர்ப்பாய்ச்சி, ஈரமாக்கி பின்னர் கைகளினால் கிழங்கைப் பிடுங்க வேண்டும். கிழங்கை பிடுங்கியவுடன் நன்கு கழுவி, ஒரு சென்டிமீட்டர் கனத்திற்கு உடனே துண்டுகள் போட வேண்டும். துண்டுகளை வெய்யிலில் போட்டு 7–10 நாட்கள் உலர்த்த வேண்டும். கிழங்கை வறுக்கும்போது சிறிது 'வனஸ்பதி' சேர்த்துக் கொள்ளலாம். வறுத்த கிழங்கை பின் பொடியாக்க வேண்டும். கிடைக்கும் சிக்ரி பொடிதான் காப்பி உற்பத்திக்கு வேண்டிய முக்கிய பொருளாகும். ஏக்கருக்கு 2,000 கிலோ வரை உலர்ந்த கிழங்கு கிடைக்கும். செலவு ரூ. 300 போக ஏக்கருக்கு சுமார் ரூ. 900 நிகர லாபம் கிடைக்கும். சிக்ரியின் இலைகள் மாட்டுக்கு சத்துள்ள தீவனமாகும்.

(22—4—1966 அன்று கோவை விவசாயக் கல்லூரி தாவர இயல் விரிவுரையாளர் திரு. ஜி. துளசிதாஸ் அவர்கள் வானொலி உரையின் சுருக்கம்).

விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட உதவி தொகை

சொந்த வசதிகளைக் கொண்டு கிணறு வெட்டும் விவசாயிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்படுவதை அரசாங்கம் நீடித்திருக்கிறது. கிணற்றுக்கான செலவு மதிப்பில் 25 சதவீதத்தை அதிகபட்சம் ரூ. 500 வரை உதவித் தொகையாக ஒவ்வொருவருக்கும் அளிக்கும் வகையில், 1966-67-ம் ஆண்டில் 200 கிணறுகளுக்காக ரூ. 1 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. புதிய கிணறு உதவித் தொகைத் திட்டத்தின்கீழ், தற்போது, கிணறு வெட்டுவதற்காக அரசாங்கத்திடம் கடன் பெறும் விவசாயிகளுக்குக் கிணற்றுக்கான செலவு மதிப்பில் 25 சதவீதத்தை அதிகபட்சம் ரூ. 500 வரை ஒவ்வொருவருக்கும் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

1966-ம் ஆண்டு மார்ச் மாதத்திய காலநிலை அறிக்கை

இ. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.

இம்மாதம் முதல் இரண்டு நாட்கள் வரட்சியாக இருந்தன. 3, 4, 11, 16, 30 இத் தேதிகளில் சென்னை மாநிலத்தின் தெற்குப் பகுதிகளில் இங்குமங்கும் சிறு தூரல் மழை யிருந்தது. 13, 14 தேதிகளில் பரவலான தூரல் சென்னை மாநிலத்தின் அநேக பகுதிகளில் ஏற்பட்டது. 15-ம் தேதியன்று சிறு தூரல் ஒரு சில இடங்களில் மாத்திரம் இருந்தது. மற்ற நாட்களில் வெகுவாக வரட்சியே மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிலவியது.

இரவு, பகல் உஷ்ணத்தின் மாறுபாடுகள் எல்லா மாவட்டங்களிலுமே இருந்தது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத முழுவதும் வரட்சி நிலவியது. நெல், ராகி, வேர்க்கடலை முதலிய பயிர்கள் சுமாரான நிலையில் இருந்தன. விசேஷமாக எந்தப் பூச்சிகளும் நோய்களும் காணப்படவில்லை.

வட ஆற்காடு மாவட்டத்திலும் வரட்சியே நிலவியது. கிணறுகளில் தண்ணீர் மிகவும் கீழே போய்விட்டது. அநேக இடங்களில் நெற்பயிர் காய்ந்து கொண்டு இருக்கிறது. சில இடங்களில் ராகி அறுவடை ஆரம்பமாகி விட்டது. கரும்பு நன்றாக இருக்கிறது. சிறிதளவு குருத்துப் பூச்சிகள் தென்பட்டு தகுந்த தடுப்பு முறைகள் கையாளப்பட்டன.

தென்னாற்காடு மாவட்டமும் வரட்சியாகவே இருந்தது. வேர்க்கடலையில் சுருள் பூச்சிகளும் இலைப்புள்ளி நோயும் ஏற்பட்டது. வேற்கடலை, எள் முதலிய பயிர்களுக்கு மிகுந்த பிரயாசையுடன் நீர்ப்பாசனம் கொடுக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் அங்குமிங்கும் லேசான மழையிருந்தது. பகல் பொழுது நல்லபடியமைந்ததால் தாளடிப் பயிர் அறுவடைக்கு சௌகரியம் ஏற்பட்டது. முதிரும் நிலையில் உள்ள தாளடிப்பயிர்களில் சிறிதளவில் குருத்துப் பூச்சியும், இலைப் புள்ளி நோயும் காணப்பட்டது. பட்டுக்கோட்டைப் பகுதிகளில் பெய்த சிறு மழையைக் கொண்டு கொளிஞ்சி விதை விதைக்கப்பட்டது. சில கோடைப் பயிர்களும் விதைக்கப்பட்டன. வேர்க்கடலையில் இலைப் புழுக்களும், புள்ளி நோயும் ஏற்பட்டது.

திருச்சி மாவட்டத்திலும் வரட்சியே நிலவியது. சில பகுதிகளில் பி. 216 நெம்பர் பருத்தி விதை நடப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் பெரிய குளம் பகுதிகளில் கொஞ்சம் மழையிருந்தது. மற்ற பகுதிகளில் ஆங்காங்கு லேசான தூரல் இருந்தது. சோளம், வேர்கடலை, பருத்தி முதலிய தோட்டப் பயிர்களுக்கு இத் தூரல் நன்மையளித்தது. மேலூர்ப் பகுதிகளில் கொளிஞ்சி விதைக்கப்பட்டது. ஆனால் நெல் விளைச்சல் இப் பகுதியில் மழைக் குறைவால் கணிசமாகக் குறைந்தது. வேர்க்கடலையில் இலைப் புழுவும், மிளகாயில் திரிப்ஸ் பூச்சியும், சோளத்தில் பேனும், கத்திரியில் கூன் வண்டும் தென்பட்டு தகுந்த முறையைக் கையாண்டு தடுக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆங்காங்கு சிறு தூரல் இருந்தது. இது போதிய அளவில் இல்லாவிட்டாலும் கரும்பு, வேர்க்கடலை, பருத்தி முதலிய பயிர்களுக்கு இது அனுகூலம் தந்தது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கொஞ்சம் மழை இருந்தது. அதனால் நெல், பருத்தி முதலியவைகளுக்கு பலன் இருந்தது. கோடை பருத்தி விதைப்புக்கும் இது வசதியளித்தது.

சேலம் மாவட்டத்தில் மழையே இன்மையால், பூமியில் உள்ள நெல், ராகி, வேர்க்கடலை, முதலியன பாதிக்கப்பட்டன. ராகி அறுவடையாகி வருகிறது. சோளம் வேர்க்கடலை, நவரை நாற்று நடல் (நெல்) முதலிய பூர்த்தியாகின. மாவில் தத்துப் பூச்சியும், பருத்தியில் காய்ப் புழு, தத்துப் பூச்சி முதலியனவும், முட்டைக் கோசில் புழுக்களும் ஏற்பட்டு இவை தகுந்த முறைகளால் தடுக்கப்பட்டன. கோவை மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவியது. நீர்நிலைகளெல்லாம் வரண்டுவிடும் நிலையில் இருந்தன. சோளம், பருத்தி, வேர்க்கடலை இவற்றின் விதைப்பு வெகுநிதானமாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மழையிருந்த போதிலும், இது போதிய அளவு இல்லாமையால் எல்லா யிடங்களிலும் பாசன வசதிகள் குறைந்துபோயின.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொஞ்சம் மழையே இருந்தது. நெற்பயிர் பாதிக்கப்படவில்லை. அறுவடை முடிந்து வந்தது. சித்திரைப்பட்ட விதைப்புக்கு வயல்கள் தயார் செய்யப்பட்டன.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

இம்மாதம் 13-ம் தேதியன்று கூனூரிலும், பாளையம் கோட்டையிலும் முறையே 39·4, 29·0 மில்லிமீட்டர் மழை பெய்தது.

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண். (1)	பிராந்தியத்தின் பெயர். (2)	மார்ச் மாத மழை அளவு. (3)	சராசரியில் இருந்து மாறுபாடு. (4)	குறிப்பு. (5)
1	வட பிராந்தியம்	..	–19·2	மிகக்குறைவு.
2	கீழ்க்கரைப் பிராந்தியம் ..	11·0	–18·3	குறைவு.
3	மத்தியப் பிராந்தியம் ..	3·7	–13·1	மிகக்குறைவு.
4	தென் பிராந்தியம் ..	21·1	–11·1	குறைவு.
5	மலைப் பிராந்தியம் ..	32·9	–26·2	குறைவு.

1966-ம் ஆண்டு மார்ச் மாத மழையளவு
(மில்லிமீட்டர்களில்)

இடத்தின் பெயர்.	இம்மாத மழை யளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1ம் தேதி முதல் மொத்த மழையளவு.
வட பிராந்தியம்—			
சென்னை (மீனம்பாக்கம்)	..	−35·8	24·0
திருர்குப்பம்*	..	−1·3	10·2
வேலூர்	..	−36·8	3·0
குடியாத்தம்*	..	−2·9	..
கிழ்க்கரைப் பிராந்தியம்—			
பாலூர்*	..	−4·6	48·6
திண்டிவனம்*	..	−2·8	12·7
கடலூர்	31·0	−28·7	61·0
நாகப்பட்டினம்	2·0	−67·3	47·0
ஆடுதுறை*	11·9	+0·5	20·6
பட்டுக்கோட்டை*	21·0	+6·1	90·5
மத்தியப் பிராந்தியம்—			
சேலம்	..	−7·4	..
சேலம்*	..	−9·2	..
கோயமுத்தூர்*	15·0	−6·3	23·6
கோயமுத்தூர்	7·0	−9·0	34·0
ஆளியார் நகர்*	..	−25·3	..
திருச்சிராப்பள்ளி	..	−21·1	12·0
தென் பிராந்தியம்—			
மதுரை*	2·0	−17·8	31·0
பாம்பன்	24·0	−41·3	61·0
கோவில்பட்டி*	50·0	+24·6	55·9
பாளையங்கோட்டை	29·0	−14·4	44·0
அம்பாசமுத்திரம்*	39·1	− 1·2	65·8
நாகர்கோயில்*	2·5	−22·9	2·5
கன்னியாகுமரி*	1·0	−21·5	7·0
மலைப்பிராந்தியம்—			
கொடைக்கானல்	55·0	−26·0	94·0
கூனூர்*	50·8	−50·0	349·5
உதகமண்டலம்*	6·9	−20·6	28·5
நஞ்சநாடு	19·0	−8·1	48·5

குறிப்பு.—*சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

1 முதல் 1½ அடி ஆழமும் கொண்டதாக இருத்தல் அவசியம். பின்னர் இந்த கால்வாய்களில் தண்ணீர் விடவும். நீர் உறிஞ்சப்பட்டதும் மறுபடியும் விடவும். இப்படி இரண்டு அல்லது மூன்று முறை விட்டு கால்வாய் கரை வழிய நீர் நிரப்பி நிறுத்தவும். 6 முதல் 12மணி நேரத்திற்குள் (மண்ணின் தன்மைக் கேற்ப) தேக்கப் பட்ட நீர் மண்ணின் இடைவெளி வழியாக கசிந்து கரும்பு வரிசைகட்கு இடையேயுள்ள கிடங்குகள் (furrow) முழுவதும் பரவிவிடுகிறது. நீர் கசிந்து மேலே வரும் போது பயிருக்கு தீங்கு செய்யும் உப்புச் சத்து இருந்தால் அவைகள் கரைக்கப்பட்டு மண்ணின் மேல் பகுதிக்கு கொண்டுவரப்படுகிறது. அதிக நீர் கிடைக்கும்போது, தண்ணீரை அதிகமாக விட்டு, உப்பு கரைந்த நீரை வயலில் இருந்து வடித்து விடலாம். இதனுல் உப்பி ஞல் ஏற்படும் தீங்குகளையும் போக்கிவிடலாம்.

இந்த முறையோடு, கரும்பு வரிசைகட்கிடையே சருகு மூடும் (Trash mulching) பழக்கத்தையும் கை யாண்டால், இந்த ஈரம் எளிதில் ஆவியாகாது தடுக்கப் பட்டு ஈரம் காக்கப்படுவதுடன் களையும் வளராது தடுக்கலாம். இந்த முறையால் சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு பாய்ச்சக்கூடிய நீரைக் கொண்டு 3 முதல் 5 ஏக்கர் வரை எளிதில் பாய்ச்சலாம். நீர் குறைவான பகுதிகளிலும், நஞ்சை நிலப் பகுதி களில் கோடையிலும் இந்த முறையை எல்லோரும் பின் பற்றி குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிகமான நிலத்திற்கு நீர் பாய்ச்சலாம். மண்ணின் தன்மை நீர் வசதிகளுக்கு தகுந்தவாறு மேற்கூறிய முறைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி வாட்சியான காலத்தில் கரும்பைக்காத்து நல்ல மகசூல் பெற்று நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவது நம் கடமையாகும்.

உழவனே, உழுவாய்!

க. வீரராகவன், திருக்கழுக்குன்றம்.

புவிவாழ நிலம் நாடுவாய்!—உன்
புயமேவும் வலிவோடு உழுதாடுவாய்!

வளங்காண நிலமாது
வரவேற்ருள் தேரிலே!
உளங்காணும் கனவோடே
உழுவாய்பொன் ஏரிலே!

விதை நன்கு விளைவாகும்
வியர்வைத்தேன் பாலிலே!
உதைவாங்கும் வறுமைப்பேய்
உனதாண்மைத் தோளிலே!

கதிர்சாய்ந்து விளையாடும்
கழனித்தாய் மடியிலே!
எதிர்சாய்ந்து துடித்தாடும்
'இலேயென்னும்' கொடுமையே!

உலகத்தின் உயிர்ப்பெல்லாம்
உனதுண்மை உழைப்பிலே!
பலகற்ருேர் படைசாயும்
பகுக்கும்உன் அழைப்பிலே!

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச்செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.

மா சாகுபடிக்கான 1964-ம் ஆண்டு 'உத்யான் பண்டிட்' பட்டம் பெற்ற திரு. உல்பத் அலி.

1963-ம் ஆண்டு, சிறந்த திராட்சை சாகுபடிக்காக 'உத்யான் பண்டிட்' பட்டம் பெற்ற பட்டிவீரன் பட்டியைச் சேர்ந்த திரு. N. தில்லை கோவிந்தன்.

அனூப்-இ-சாஹி ரகத்துக்கான முதற் பரிசும் மற்றும் பல பரிசுகளும் பெற்ற திரு. R. S. ரஞ்சுண்டன், கூரானூர், கோவை மாவட்டம்.

பலரக அலங்கார பூக்களுக்கான முதற் பரிசு பெற்றவர்களில் மூவர் முறையே போத்தனூரைச் சேர்ந்த குமாரி சுமதி சீதாராம், திருமதி பாமா சேகர், குமாரி சுபத்ரா சீதாராம்.

252/1-9-66/L 252

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966



1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 25-ம் தேதி அன்று புதுடில்லியில் நடைபெற்ற கரும்பு அபிவிருத்தி பற்றிய அகில இந்திய கருத்தரங்கைத் துவக்கி வைத்து பிரதமர் இந்திரா காந்தி உரையாற்றுதல்.



"விவசாயிகள் பரிவர்த்தனை திட்டத்தின் கீழ்" அமெரிக்கா செல்லவிருக்கும் இளம் விவசாயிகள் 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 26-ம் தேதி அன்று பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்துப் பேசினர்.

1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 14-ம் தேதி அன்று சென்னை, அசோக் விஹாரில் கால்நடை பராமரிப்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பால் பெருக்கு தின' விழாவில் சென்னை மாநகர மேயர் திரு. மைனர் மோசஸ் பால் விநியோகிக்கும் காட்சி.